வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 23.02.2022 புதன்கிழமை | இதழ் : 80 | பக்கங்கள் : 16




# மன்னார் மனித புதைகுழி வழக்கில் ஆஜராக சட்டவாதிகளுக்கு அனுமதி!

## ஊடகங்களும் செய்தி சேகரிக்கலாம் வவுனியா மேல்நீதிமன்றம் தீர்ப்பு

வவுனியா, பெப்ரவரி 23

**மன்னார் மனித புதைகுழி வழக்கில் பாதிக்கப்பட்டோர் சார்பாக சட்டத்தரணிகள் ஆஜராவதற்கு வவுனியா மேல்நீதி மன்றம் அனுமதி வழங்கியுள்ளதுடன் ஊடகங்கள் செய்தி சேரிப்பதற்கான அனுமதியையும் வழங்கி உத்தரவிட்டது.**

மன்னார் மனிதப்புதை குழி விடயம் தொடர்பாக சிரேஷ்ட சட்டத் தரணி கே.எஸ்.ரட்ண வேலால் வவுனியா மேல்திமன்றில் மீளாய்வு மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அதன் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது.

குறித்த தீர்ப்பின் பின்னர் சட்டத்தரணி கே.எஸ். ரட்ணவேல் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்-

15

## ரஷ்யா - உக்ரைன் முறுகலால் இலங்கையிலும் பாதிப்புகள்!



### சுட்டிக்காட்டினார் ரணில்

கொழும்பு, பெப். 23

ரஷ்ய துருப்புகள் நேற்றிரவு உக்ரைனுக்குள் நுழைந்துள்ளதால், உலக சந்தையில் எரிபொருள் விலையில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இது இலங்கை பொருளாதாரத்திலும் தாக்கம் செலுத்தும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரி விக்கையில்-

15

## மனித உரிமைகள் கூட்ட தொடரில் தமிழ் கட்சிகள் பங்கேற்க மாட்டா!

### த. தே. கூ. இன்னும் முடிவு எட்டவில்லை

யாழ்ப்பாணம், பெப். 23

ஐக்கிய நாடுகள் (ஐ. நா.) மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேரிலோ, மெய்நிகர் வழியாகவோ பங்கேற்காது. இதேநேரம் தமிழ் மக்கள் கூட்டணி நேரில் பங்கேற்காத போதிலும் மெய்நிகர் வழியாக பங்கேற்க சந்தர்ப்பம் கிடைத்தால் கலந்து கொள்ளும் என்றும் தெரிவித்துள்ளன.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் இது தொடர்பில் முடிவு எட்டப்படவில்லை என்று அந்தக் கட்சியின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஐ. நா. மனித உரிமைகளின்

15

## இன்று சுழற்சிமுறையில் 5 மணி நேர மின்வெட்டு!

கொழும்பு, பெப். 23

இன்றைய தினமும் சுழற்சி முறையில் நான்கரை மணி நேரத்துக்கு அதிகமாக மின் துண்டிப்பு அமுலாக்கப்படவுள்ளது.

இதுதொடர்பில் இலங்கை மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளதாக, அதன் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, இன்று புதன்

15

## கிளிநொச்சி மாவட்டத்தில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு

கிளிநொச்சி, பெப். 23

கிளிநொச்சியில் அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட பெற்றோல், டீசல் விநியோகம் இடம்பெற்று வருகின்றது.

கிளிநொச்சியில் நேற்று முதல் பெற்றோல், டீசல் தட்டுப்பாடு நிலவுகின்றது. எரிபொருள் பெற்றுக் கொள்ள வருகை தந்த பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்பி செல்வதுடன், அதிருப்தியும்

15

## ஹெரோயின் விற்பனை செய்த தாயும் 13 வயது மகளும் கைது!

வடமராட்சி, பெப். 23

வடமராட்சி - நெல்லியடி - குடவத்தை பகுதியில் ஹெரோயின் வியாபாரத்தில் ஈடுபட்ட சந்தேகத்தில் 13 வயது சிறுமியும் தாயும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து ஹெரோயின் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டது.

15



# இப்படியும் நடக்கிறது...!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாக பதிவு செய்யவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே பலரும் கூட்டமைப்புக்குள் இருந்தபோது கோரிக்கை விடுத்து வந்தனர்.

முக்கியமாக, ஈ. பி. ஆர். எல். எவ். கட்சி கூட்டமைப்புக்குள் இருந்தபோது, இதற்காக தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வந்தது.

அந்தக் 'குடைச்சல்' காரணமாகவே அது கூட்டமைப்பிலிருந்து வெளியேற (அல்லது வெளியேற்றப்பட) நேர்ந்தது என்பதும் நமக்கெல்லாம் தெரிந்ததுதான்.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் அவ்வப்போது இதுதொடர்பாக குரல்கொடுத்தாலும், தமிழ் அரசுக் கட்சியின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளை எதிர்த்து 'கெத்துக்காட்டும்' மனபலம் அவர்களிடம் இல்லாத காரணத்தால் அது நடந்தேறவில்லை.

ஆனாலும் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் எல்லாம் சேர்ந்து தேர்தல் ஆணையத்திற்கு ஒரு கடிதம் கொடுத்திருக்கின்றன. தாங்கள் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் இயங்குவதாக அவை தேர்தல் ஆணையத்திற்கு தெரிவித்திருப்பதாகவும், அதனால் கூட்டமைப்பை தனியாகப் பதிவு செய்யவேண்டியதில்லை என்றும் ஒருதடவை அதன் பேச்சாளர் விளக்கமளித்திருந்தார்.

கூட்டமைப்பில்தான் இந்த நிலை என்றால், ஒரேயோரு கட்சியை மாத்திரம் கொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அவ்வாறு எந்த பதிவையும் செய்யாமல் இயங்கி வருகின்றது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தனது குடும்பக் கட்சியான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் பெயரில் தேர்தலை சந்தித்துக் கொண்டிருக்கின்றபோதிலும், தமது அரசியல் இயக்கத்தை தமிழ்த் தேசிய மக்கள் முனன்ணி என்ற பெயரிலேயே நடத்தி வருகின்றார்.

யாழ். முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து வெளியேற்றியதாக அவர்கள் அறிவித்தபோது அவர், அப்படியொரு கட்சியில் தான் உறுப்பினராகவே இல்லாதபோது எப்படி தன்னை வெளியேற்ற முடியும் என்று அவர்களை சட்ட சிக்கலுக்கு உள்ளாக்கியிருந்த அதேவேளை, அந்தப் பெயரில் கட்சியை பதிவுசெய்வதற்கு அவர் முயன்று கொண்டிருக்கிறார் என்றும் கூறப்படுகின்றது.

கூட்டமைப்பில் பல கட்சிகள் இருப்பதால் அவ்வாறு கட்சிகள் தமக்கிடையே ஒரு கூட்டணியை உருவாக்கி ஒரு பெயரில் இயங்குவது சரி. ஒரு கட்சி மட்டும் இன்னுமொரு பெயரில் இயங்கவேண்டிய தேவை எதற்காக வந்தது என்பதை அவர்களிடம்தான் கேட்டு அறியவேண்டும்.

தமிழ் மக்கள் கூட்டணி என்ற தனது கட்சியை பதிவு செய்வதற்கு முன்னதாக விக்னேஸ்வரன் கடந்த தேர்தலில் ஈ. பி. ஆர். எல். எவ்.உடன் கூட்டணி அமைத்தபோது, அந்தக் கூட்டணியில் பதிவுசெய்யப்படாத அனந்தியின் ஈழத் தமிழர் சுயாட்சி கழகமும் சிறிகாந்தா- சிவாஜியின் தமிழ்த் தேசியக் கட்சியும் இணைந்து தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்ற பெயரில் தேர்தலை சந்தித்தன. அதற்காக அவர்கள் கூட்டணியிலிருந்த பதிவுசெய்யப்பட்ட ஒரேயோரு கட்சியான ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியின் பெயரை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்று பெயரை மாற்றிவிட்டே தேர்தலைச் சந்தித்தார்கள். இப்போது ஈ. பி. ஆர். எல். எவ். என்றொரு கட்சியே இல்லை.

அதேபோல, தமிழ் காங்கிரஸூம் தனது பெயரை தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்று மாற்றியிருக்கலாம். ஆனால், அதற்கு கஜேந்திரகுமார் குடும்பம் சம்மதிக்குமா என்பது கேள்விக்குரியது. அதனால்தானோ என்னவோ தமிழ் காங்கிரஸ் என்ற கட்சியே முன்னணியாக வேடம் போட்டுக் கொண்டு இயங்கிவருகின்றது.

இவை எல்லாம் எதற்காக இப்போது என்று நீங்கள் மண்டையைப் பிய்த்துக் கொண்டிருக்கலாம்.

பதின்மூன்றை ஏற்றுக்கொண்டதன் மூலம் தமிழர் பிரச்னையை ஒற்றையாட்சிக்குள் முடக்கி விட்டார்கள் என்று பொங்கி எழுந்த முன்னணி, அதற்கு எதிராகப் போராடுவதற்கு பல நாட்களுக்கு முன்னரே திட்டமிட்டு மக்களுக்கு அறிவித்து போராட்டம் நடாத்தியிருந்ததும் நினைவிருக்கலாம்.

ஆனால், அதே முன்னணி தனது வருடாந்த மாநாட்டை முல்லைத்தீவில் கடந்த ஞாயிறன்று நடத்தியிருந்ததை வாசகர்கள் அறிந்திருப்பீர்கள். ஒரு கட்சியின் வருடாந்த மாநாடு என்றால் அது எத்தகைய தடல்புடலாக நடத்தப்படவேண்டியது என்பது அவர்கள் அறியாததல்ல.

ஆனால், அந்த மாநாடு பற்றிய அறிவிப்பு அது நடப்பதற்கு முதல்நாள் நள்ளிரவே ஊடகங்களுக்கு அறிவிக்கப்பட்டது.

முன்னதாகவே இப்படியொரு மாநாடு நடப்பது குறித்து அறிவித்தால், இல்லாத கட்சி ஒன்றுக்கு ஏன் இந்த மாநாடு என்று கேட்டு யாராவது நீதிமன்றத்தை நாடி விடுவார்களோ என்ற அச்சம் இதற்கு காரணமாக இருக்கலாம் என்கிறார் அவர்களை நன்கு அறிந்த சட்டத்தரணியான அரசியல்வாதி ஒருவர்.

**- ஊர்க்குருவி**

# திருக்கேதீஸ்வர யாத்திரிகர் மடம் அமைக்கும் பணியை நிறுத்தாதீர்!

## கிராமத்து மக்கள் அதிகாரிகளுக்கு மனு

மன்னார், பெப். 23

திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபைக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் யுத்த காலத்தில் அழிக்கப்பட்ட யாத்திரிகர் மடமே மீள அமைக்கப்பட்டு வருகின்றது. இந்தப் பணியை தடுத்து நிறுத்த வேண்டாம் என்று கோரி திருக்கேதீஸ்வர கிராம மக்கள் நேற்று செவ்வாய்க்கிழமை மாவட்டத்தின் உயர் அதிகாரிகளுக்கு மனுக்களை கையளித்தனர்.

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வீதியில் பொது மக்கள் மற்றும் யாத்திரிகர்களின் நன்மை கருதி உரிய அனுமதியுடன் யாத்திரிகர் மடம் அமைக்கப்பட்டு வந்த நிலையில், எள்ளுப்பிட்டி பகுதியை சேர்ந்த சில மக்களின் எதிர்ப்பால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இந்தப் பகுதியில் முன்பிருந்த மடம் போர் காலத்தில் அழிவடைந்தது. தற்போது கிராம மக்கள் இணைந்து அந்தப் பகுதி மக்களின் நன்மை கருதியும் அதே நேரத்தில் மத வழி பாடுகளுக்கு வரும் யாத்திரிகர்களின் நன்மை கருதியும் குறித்த யாத்திரிகர் மடத்தை மீண்டும் அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அனைத்துத் தரப்பின் முழுமையான அனுமதியை பெற்றுக் கொண்டு குறித்த பணிகள் இடம்பெற்று வருகின்ற போதும் எள்ளுப்பிட்டி மக்கள் சிலரது எதிர்ப்பால் குறித்த பணிகளை இடை நிறுத்தும் நிலை ஏற்பட்டது. எனவே, குறித்த அபிவிருத்தி பணியை தடுக்க எவருக்கும் உரிமை இல்லை என்பதை தெரிவித்துள்ளதோடு, இவ்வாறான இடையூறுகளை ஏற்படுத்த இடமளிக்க வேண்டாம் என்றும் அந்த மக்கள் கோரியுள்ளனர்.

திருக்கேதீஸ்வரம் கிராம அபிவிருத்திச் சங்கம்,சிவபுரம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவை இணைந்து மக்களுடன் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்,மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் இறுதியாக மன்னார் பிரதேச செயலாளர் எம். பிரதீப் ஆகியோருக்கு தமது மனுக்களை அனுப்பி வைத்துள்ளனர்.

இதன் போது கருத்து தெரிவித்த மன்னார் பிரதேச செயலர் குறித்த பகுதியில் இரு தரப்பினருக்கும் இடையில் முரண்பாடான நிலை நீடித்து வருகின்றமையால் எதிர்வரும் சிவராத்திரி நிகழ்வு நிறைவடைந்த பின்னர் இரு கிராம பிரதிநிதிகளையும் அழைத்து இணக்கப்பாடான கலந்துரையாடல் மூலம் பிரச்னைக்கு தீர்வு பெற்றுத் தருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக மக்களிடம் பிரதேச செயலாளர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை மன்னார்-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் மாந்தை கிராமத்தில் அரச காணியில் தனியார் நிதியில் அமைக்கப்பட்டு வரும் கட்டிடத்தின் அபிவிருத்தி பணியை இடை நிறுத்தக்கோரி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை மாந்தை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் கிராம மக்கள் ஒன்றிணைந்து மன்னார் பிரதேச செயலாளரிடம் அவசர மகஜர் ஒன்றை கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வல்லப்பட்டைகளுடன் ஒருவர் கைதானார்!

மட்டக்களப்பு, பெப். 23

மட்டக்களப்பு - தாண்டவன்வெளி வாவிக்கரையில் தனியார் விடுதி ஒன்றில் நடத்தப்பட்ட தேடுதலின்போது வல்லப்பட்டைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இராணுவத்தின் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் மட்டக்களப்பு மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பி. எஸ். பி. பண்டாரவுக்கு வழங்கப்பட்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது விற்பனைக்காக கொண்டு வரப்பட்ட வல்லப்பட்டைகளை பொலிஸார் கைப்பற்றியதுடன் அளுத்கம - தர்கா நகரை சேர்ந்த ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

கைதான நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ஐ)

# விண்ணப்பம் கோரல்!

யாழ்ப்பாணம், பெப். 23

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் பொறியியல் தொழில்நுட்ப இளமாணி கற்கைநெறிக்காக மீளவும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தியடைந்த யாவரும் இந்தக் கற்கைநெறிக்கு எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங்களை www.ou.ac.lk என்ற இணையத்தளம் ஊடாக அல்லது யாழ். பிராந்திய நிலையத்தின் ஊடாக விண்ணப்பிக்க முடியும் என்று யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)



# அரச சார்பற்ற நிறுவனங்களின் விளக்கமளிப்பு கலந்துரையாடல்!

முல்லைத்தீவு, பெப். 23

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடப்பாண்டில் அரச சார்பற்ற நிறுவனங்களால் அமுல்படுத்தப்படுகின்ற செயல்திட்டங்கள் தொடர்பாக துறை சார்ந்த திணைக்களத் தலைவர்களுக்கு விளக்கமளிக்கும் விசேட கலந்துரையாடல் நேற்று செவ்வாய்க்கிழமை மாவட்ட அரச அதிபர் க. விமலநாதன் செயலகத்தின் அரியாத்தை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது இரண்டாம் கட்டமாக 13 அரச சார்பற்ற நிறுவனங்களால் மாவட்டத்தில் செயல்படுத்தப்படவுள்ள செயல்திட்டங்களின் விளக்க உரைகள் சம்பந்தப்பட்ட திணைக்கள தலைவர்களுக்கு அளிக்கை செய்யப்பட்டு அவர்களின் கருத்துக்கள் அனுமதிக்காக பெறப்பட்டன.

மேலும், முதல் கட்டமாக திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்த ஏழு அரச சார்பற்ற நிறுவனங்களின் திட்ட முன்மொழிவுகள் பெப்ரவரி முதலாம் திகதி கலந்துரையாடலில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது கருத்துத்தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர், "இத்தகைய நடைமுறை எமது மாவட்டத்தில் மட்டுமே பின்பற்றப்படுவதாக சிலர் குறை கூறுகிறார்கள். உண்மையில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் செயல்படுத்தப்படும் பிரதேசங்களின் பிரதேச செயலாளர்கள் மற்றும் துறைசார்ந்த திணைக்கள தலைவர்களுக்கு அவசியம் தெரியப்படுத்துவதற்காகவும் அவர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டு தெளிவுபடுத்துவதற்காகவே இது போன்ற கலந்துரையாடல்களை தாம் நடத்துகிறோம். எமது மாவட்ட மக்களுக்கான தேவைகள் அதிகம். அத்தகைய தேவைகளை இத் திட்டங்களினூடாக இனங்கண்டு சரியான திசையில் கொண்டு செல்வதற்கு இக் கலந்துரையாடல் வலுச் சேர்க்கும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
23.02.2022 புதன்கிழமை
பிலவ வருடம், மாசி 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# கூட்டமைப்பின் தலைமைத்துவ பலவீனம்?

ஓர் இனத்தை வழிநடத்தும் தலைமை பலவீனமாக இருந்தால், அந்த இனத்தின் பெயரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு முயற்சியும் வெற்றிபெறப் போவதில்லை. யுத்தத்திற்கு பின்னரான கடந்த பன்னிரெண்டு வருட கால அரசியல் நகர்வுகளில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய விடயங்கள் இடம்பெறாமைக்கு, கூட்டமைப்பின் தலைமைத்துவத்திலுள்ள குறைபாடுகளே காரணமாகும். ஆனால், இப்போதும் அது அப்படியே தொடர்வதுதான் கவலைக்குரியது.

கூட்டமைப்பின் சார்பில் அமெரிக்காவுக்கு நிபுணர் குழுவொன்று சென்று வந்தது. ஆனால், அது பற்றி கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்குத் தெரியாது. இப்போது கூட்டமைப்பு – உலகத் தமிழர் பேரவையின் கூட்டு அறிக்கையொன்று வெளியிடப்பட்டிருக்கின்றது. ஆனால், இது தொடர்பில் ஈழநாடு வினவியபோது, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு இது தொடர்பில் எதுவும் தெரிந்திருக்கவில்லை. கூட்டமைப்பின் சார்பில் அமெரிக்கா சென்றிருந்த நிபுணர் குழுவுடன் புலம்பெயர் அமைப்புக்கள் சார்பில் உலகத் தமிழர் பேரவையும் இணைந்திருந்தது. இது தொடர்பிலும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் அறிந்திருக்கவில்லை.

இவ்வாறான பல விடயங்கள் எந்த அடிப்படையில் நடைபெறுகின்றன? ஒருமுறை நடந்தால் அது தவறுதலானது. பலமுறை நடந்தால் அது திட்டமிட்ட ஒன்றாகும். இவ்வாறான விடயங்கள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றபோது – ஏன் சம்பந்தன் அமைதியாகவே இருக்கின்றார்? சம்பந்தனால் எதனையும் கட்டுப்படுத்த முடியவில்லையா – அல்லது, சம்பந்தன் அவரின் தலைமைத்துவ தகுதியை முற்றிலுமாக இழந்துவிட்டாரா – அல்லது, கூட்டமைப்புக்கு தலைமை தாங்குவதற்கு சம்பந்தனால் முடியவில்லையா?

ஒருமுறை இது தொடர்பான கேள்வி ஒன்றுக்கு – ஏனையவர்களுக்கு அறிவிப்பது எனது வேலையல்ல, என்றவாறு கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் பதிலளித்திருந்தார். தனக்கு தரப்படும் வேலையை தான் செய்கிறார் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். அவ்வாறாயின் சம்பந்தனுக்கு தெரிந்தே அனைத்தும் இடம்பெறுவதாகவே, ஒருவர் இதனை புரிந்துகொள்ள வேண்டியிருக்கின்றது.

சம்பந்தனுக்குத் தெரிந்துதான் அனைத்தும் நடக்கிறதென்றால் – எதற்காக சம்பந்தன் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களை உதாசீனம் செய்கின்றார்? பங்காளிக் கட்சிகளுடன் இணைந்திருக்க அவர் விரும்பவில்லையாயின், அவர்களை தனி வழியில் செல்லுமாறு சம்பந்தன் கோர வேண்டும். அவ்வாறில்லாது, கூட்டமைப்பாக இருப்பதானால் – அதற்குரிய அரசியல் ஒழுக்கத்துடன் சம்பந்தன் நடந்துகொள்ள வேண்டும்.

கூட்டமைப்புக்குள் இடம்பெறும் இதுபோன்ற விடயங்கள், தமிழ் மக்களின் உரிமைநோக்கிய அரசியலை பரிகசிப்புக்கு உரியதாக்கின்றது. இராஜதந்திர தரப்புக்கள் எவரை நம்பி பேசுவதென்னும் நிலைமையை தோற்றுவிக்கின்றது. இது தமிழ் மக்களின் உரிமை நோக்கிய நகர்வுகளை மோசமாகப் பாதிக்கக்கூடியது. சம்பந்தன் தனது பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும். அவரின் உடல் நிலை அதற்கு இடம் கொடுக்காவிட்டால் – பொறுப்புக்களை ஏனைய கட்சியினரிடம் பகிர்ந்தளிக்க முன்வர வேண்டும். இளம் தலைவர்களுக்கு இடமளிக்க வேண்டும்.

கூட்டமைப்பின் தலைமைத்துவம் என்பது – மூன்று கட்சிகள் மனமுவந்து வழங்கியிருப்பது. அதனை சம்பந்தன் மதித்து நடக்க வேண்டும். சம்பந்தன் கூட்டமைப்பின் தலைவராக நடந்துகொள்ள வேண்டும். அவர் கூட்டமைப்பின் தலைவராக நடந்து கொள்ளாமையின் காரணமாகவே, கூட்டமைப்பில் எவரும் எதையும் செய்யலாம் என்னும் நிலைமை காணப்படுகின்றது. கூட்டமைப்பின் அனைத்து தவறுகளுக்கும் – அனைத்து பின்னடைவுகளுக்கும் – அனைத்து குழப்பங்களுக்கும் – அனைத்து உள்முரண்பாடுகளுக்கும், ஒருவர்மீது குற்றம்சாட்ட முடியுமென்றால், அது நிச்சயம் சம்பந்தனாக மட்டுமே இருக்கமுடியும்.

# தமிழ் ஊடகத்துறை செழிப்புற்றிருக்கும் யாழ்ப்பாணத்தில் ஊடக அமைச்சர்!

**அலசுவது இராஜதந்திரி**

ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும கடந்தவாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தார். அங்கே நெடுந்தீவு உட்பட பல்வேறு இடங்களுக்கும் அவர் பயணஞ் செய்திருந்தார்.

ஊடகத்துறையைப் பொறுத்தவரை குறிப்பாக பிராந்திய பத்திரிகைகள், தொலைக்காட்சி என்பவை யாழ்ப்பாணத்தில் மிகச்சிறப்பாக வெளிவருவதோடு ஊடகவியலாளர்கள் பலரும் ஊடகத்துறையில் ஈடுபட்டு தொழில் வாய்ப்புக்களை பெற்றவர்களாகவும் இருக்கின்றனர். அத்துடன், தேசிய பத்திரிகைகளோடு போட்டி போடுமளவிற்கு உள்ளூர், வெளியூர் செய்திகள் மட்டுமல்ல. பத்திரிகை வடிவமைப்புகள்கூட தரமானவையாகவே இருக்கின்றன. அண்மையில் ஈழநாடு பத்திரிகையை பார்வையிட்ட சிரேஷ்ட இந்திய ஊடகவியலாளர் பி. கே. பாலசந்திரன் மிகவும் வியப்பளிக்கும் விதத்தில் ஈழநாடு வெளிவருவதாக குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருகின்ற ஏனைய பத்திரிகைகளும் சிறந்த முறையில் வட பகுதி மக்களின் தகவலறியும் ஆவலை பூர்த்தி செய்பவையாக இருக்கின்றன எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இவை யாவற்றுக்கும் மேலாக வடக்கே யாழ்ப்பாணத்தில் குறிப்பாக இலங்கையில் முதலாவது பிராந்திய தொலைக்காட்சியாக டான் (Dish Asia NetWrok - DAN) இயங்கி வருகின்றது. டான் தொலைக்காட்சி மூலமாக தேசிய செய்திகள் உட்பட வடக்கு - கிழக்கின் பிராந்திய செய்திகள் மற்றும் உலக செய்திகள் அனைத்தையும் தேசிய தொலைக்காட்சிகளை நம்பியிராது பிரந்திய தொலைக்காட்சி அஞ்சல் மூலமாக வடக்கு - கிழக்கு மக்கள் பார்வையிட முடிகின்றது.

இதுதவிர, யாழ்ப்பாணத்தின் பத்திரிகையாளர்களும் ஈழநாடு, உதயன் போன்ற பத்திரிகைகளும் "நெருப்பாற்றை" கடந்து வந்தவையாக இருக்கின்றன.

1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் எரிக்கப்பட்ட அதே இரவில் யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையும் எரியூட்டப்பட்டிருந்தது. யாழ். பொதுசன நூலகம் எரியூட்டப்பட்ட தகவல் மறுநாள் பத்திரிகைகளில் வந்துவிடக்கூடாது என்ற காரணத்தினாலும், யாழ்ப்பாண மக்களின் அறிவுப்பசியைத் தீர்த்து வந்த ஒரு நிறுவனம் என்ற காரணத்தினாலுமே யாழ்ப்பாண பொதுசன நூலகத்தை அன்று மாவட்ட சபை தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைளுக்காக யாழ்ப்பாணம் வநதிருந்த சிலர் தீ வைத்து நாசமாக்கியிருந்தனர். யாழ்ப்பாண பொதுசன நூலகம் எரியூட்டப்பட்ட காலப் பகுதியிலேயே வடக்கே படிப்படியாக ஆயுதப் போராட்டமும் துளிர்விட ஆரம்பித்திருந்தது.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை அங்கே ஆயுதப் போராட்டம் விரிவடைய ஆரம்பித்தபோது பொதுமக்கள் ஊரடங்கு மற்றும் வட பகுதியிலிருந்து ஏனைய பிரதேசங்களுக்கான போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டமை போன்ற காரணங்களால் பெருமளவு கஷ்டங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

விலைவாசி உயர்வுகள் உட்பட சட்டம் ஒழுங்குகூட பெரிதும் சீர்குலைந்திருந்தது. இத்தருணத்தில் யாழ். மக்களின் தகவல் அறியும் ஆவலைப்பூர்த்தி செய்பவையாக வடக்கே இருந்து வெளிவந்த பத்திரிகைகளே காணப்பட்டிருந்தன.

1959ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஈழநாடு பத்திரிகையே யாழ். மக்களுக்கு சேவையாற்றி வந்திருந்தது. ஆனால் நாளடைவில் வடக்கு - கிழக்கில் தீவிரவாத பிரச்னைகள் அதிகரித்தபோது வடக்கு - கிழக்கு மக்களிடையே தகவல் அறியும் ஆவலும் அதிகரிக்கவே யாழ்ப்பாணத்தில் பிராந்திய பத்திரிகைளும் ஏராளமாகவே வெளிவர ஆரம்பித்தன.

ஈழநாடு பத்திரிகையைத் தொடர்ந்து உதயன் பத்திரிகையும் நல்ல முறையில் வெளிவர ஆரம்பித்திருந்தது. கொழும்பில் பிரபல தமிழ் பத்திரிகையாக விளங்கிய தினபதி - சிந்தாமணி ஆகியவற்றில் ஊடகத்துறை ஜாம்பவான் எஸ். டி. சிவநாயகத்தின் காலத்தில் பணியாற்றி ஊடகத்துறையில் நிறையவே அனுபவம் பெற்றிருந்த ம. வ. கானமயில்நாதன், ந. வித்தியாதரன் ஆகியோர் உதயன் பத்திரிகையின் ஆரம்பத்துக்கும் வளர்ச்சிக்கும் அயராது உழைத்து அப்பத்திரிகையை வடபகுதி அந்தகாரச்சூழலில் சிக்குண்டிருந்தபோதிலும் சிறந்த முறையில் வெளிக்கொண்டு வந்திருந்தனர். இதற்காக அவர்கள் நிறையவே விலைகொடுக்க வேண்டிய நிலைமைகளும் ஏற்பட்டிருந்தன. ஏனெனில், உதயன் பத்திரிகை நிறுவனம் பல தடவைகள் தாக்குதலுக்குள்ளாகியதோடு அங்கே பணியாற்றிய ஊடகத்துறை சார்ந்த ஊழியர்களும், தாக்கப்பட்டும் கொல்லப்பட்டுமிருந்தனர். அத்துடன், உதயன் ஆசிரியராக இருந்த கானமயில்நாதனும் ஒரு தடவை அலுவலகம் வரும்போது வாகனத்தால் தாக்கப்பட்டார். இதேபோன்று, அந்தப் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஞா. குகநாதன் மீதும் 2011ஆம் ஆண்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

எனவே, யாழ்ப்பாணத்தில் ஊடகத்துறை வளர்ச்சி என்பது நெருப்பாற்றைக் கடந்து வந்ததாகவும் சவால்கள் நிறைந்தவையாகவும் இருந்தன. இருந்தபோதிலும் எத்தகைய சவால்களுக்கு மத்தியிலும் யாழ்ப்பாணத்தில் தற்போது நீண்ட நாட்களுக்குப்பின்னர் ஈழநாடு பத்திரிகை மீளவும் வெளிவந்துள்ள நிலையில், உதயன், வலம்புரி, யாழ். தினக்குரல், காலைக்கதிர் என்ற என்ற பத்திரிகைகளும் நல்ல முறையில் வெளிவந்தமுள்ளன.

இத்தகைய பின்னணியில் வடக்கே பயணித்திருந்த ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும இலங்கையில் ஜனநாயகத்தின் ஒரு தூணாக இருக்கின்ற ஊடகத்துறை யாழ்ப்பாணத்தில் பெரும் இழப்புகளுக்கு மத்தியிலும் உறுதியுடனிருப்பதையே அறிந்து கொண்டிருக்க முடியும். •

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பெப்ரவரி - 23 புதன்கிழமை
பிலவ வருடம் - மாசி 11
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : சப்தமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் அதை சமாளித்து விடுவீர்கள். வாழ்க்கைத்துணைக்கு மகிழ்ச்சி தரும் செய்தி ஒன்று வந்து சேரும். குடும்பத்தில் மூத்தவர் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்**
திருப்திகரமான நிகழ்வுகளால் மனதில் சந்தோஷம் நிலவும். புதிய விஷயத்தை கற்றுக்கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்**
உங்களுடைய சாதுர்யமான பேச்சினால் வருமானம் உயரும். தந்தை வழி உறவினருடன் இருந்த மனஸ்தாபம் அகலும். இன்று விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் யோகம் உண்டு.

**கடகம்**
பணி மாற்றம் குறித்த எண்ணம் இருந்தால் அதை தள்ளிப்போடுங்கள். நெருங்கிய உறவினர்களுடன் பேசும் போது பொறுமை அவசியம். பழி வாங்கும் எண்ணம் வேண்டாம். சேமிப்பில் ஆர்வம் கூடும்.

**சிம்மம்**
உறவினர்களுக்குள் ஒற்றுமை அதிகரிக்க நீங்கள் காரணமாவீர்கள். மனதில் தன்னம்பிக்கை, தைரியம் அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும். முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். குதூகலமான நாள்.

**கன்னி**
பிறருக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். நிம்மதியான நாள். வெற்றியால் சந்தோஷம் உண்டாகும். சாத்து சம்மந்தமாக நீங்கள் மத்யஸ்தம் செய்வீர்கள்.

**துலாம்**
அரசு வகையில் ஆதரவு உண்டு. கலைகளில் தேர்ச்சி ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி அதிகரிக்கும். பணிச்சுமை குறையும். நீண்ட கால எண்ணம் ஒன்று நிறைவேறி மகிழ்விக்கும்.

**விருட்சிகம்**
வயிற்று சம்மந்தமான உபாதைகள் தீரும். பிரச்னைகள் குறையும். குறிக்கோளை நோக்கிச் செல்வீர்கள். பரபரப்பான நாள். மகிழ்ச்சியான நாள். உங்களின் நீண்ட கால எண்ணம் ஒன்று பலிக்கும்.

**தனுசு**
விரயங்கள் குறையும். விழிப்புணர்வோடு செயல்படுவீர்கள். உறவினர்களிடம் அதிகம் நெருங்காமல் இருப்பது நல்லது. எதையும் ஒரு முறைக்கு இரு முறை யோசித்து செய்ய வேண்டிவரும்.

**மகரம்**
சகபணியாளர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு உயரும். குடும்பத்தினரை புரிந்து கொண்டு செயல்பட்டால் மகிழ்ச்சி அதிகரிக்கும். சக பணியாளர்களிடம் வெறுப்பின்றி செயல்படுங்கள்.

**கும்பம்**
மனசாட்சியின்படி செயல்பட்டு நிம்மதி காண்பீர்கள். கடன் பிரச்னை தீரும். தந்தையின் உடல்நலம் மேம்படும். நிலுவைப் பணிகளை விரைவாக செய்து முடிப்பீர்கள்.

**மீனம்**
பணியாளர்களுக்கு இருந்து வந்த சிரமம் இன்று குறையும். பேச்சிலும், செயலிலும் கவனமாக இருக்க வேண்டிய நாள். மின்னணு சாதனங்களால் தொல்லை ஏற்படும். எதிர்பாராத செலவு வந்து நீங்கும்.

# நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் தி.மு.க.வுக்கு அபார வெற்றி!

## 21 மாநகராட்சிகளையும் கைப்பற்றியது

சென்னை, பெப். 23

தமிழகம் முழுவதும் நடைபெற்ற நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் வெளிவந்துள்ள முடிவுகளின்படி தி.மு.க. அணி மிகப்பெரிய அளவில் முன்னிலை வகிக்கின்றன. அ.தி. மு.க, பா.ஜ.க, பா.ம.க. உள்ளிட்ட கட்சிகள் ஆங்காங்கே வெற்றியை பதிவு செய்து வருகின்றன. 21 மாநகராட்சிகளும் திமுக வசமாகியுள்ளன.

சீமானின் நாம் தமிழர் கட்சியும், கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யக் கட்சியும் மாநகராட்சித் தேர்தலில் படுதோல்வியை சந்தித்துள்ளன. நாம் தமிழர் கட்சிக்கு இரணியல் பேரூராட்சியில் மட்டும் வெற்றி கிடைத்துள்ளது. நகராட்சித் தேர்தலிலும் பெரும்பாலும் அதே நிலைதான் நிலவுகிறது.

தி.மு.க. வெற்றியை அடுத்து



சென்னையில் உள்ள அக்கட்சியின் தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் குவிந்த தொண்டர்கள் பட்டாசுகளை வெடித்து ஆடி, பாடி வெற்றியை கொண்டாடினர்.

இந்நிலையில் முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலினை சென்னையில் உள்ள முகாம் அலுவலகத்தில், திமுக முக்கிய நிர்வாகிகள் சந்தித்து உள்ளாட்சித் தேர்தல் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

அமைச்சர் துரைமுருகன், ஆ.ராசா, தயாநிதி மாறன், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத் தலைவர் வாகை சந்திரசேகர், ஆகியோர் மு.க.ஸ்டாலினை சந்தித்து பொன்னாடை அணிவித்து மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர்.

# அ.தி.மு.கவினர் தோல்வியடைந்ததாக அறிவிக்க உத்தரவிடப்பட்டுள்ளது

## எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு



சென்னை, பெப். 23

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளர்கள் வெற்றிப் பெற்றால் தோல்வியடைந்ததாக அறிவிக்கக்கோரி வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவரும், அ. தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளருமான எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அளித்த பேட்டியில், "முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுதிய கடிதத்தில் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் குறித்து குறிப்பிட்டுள்ளார். கள்ள வாக்கு போட்டவரை பிடித்துக் கொடுத்த ஜெயக்குமார் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குற்றவாளிகளை பிடித்துக் கொடுப்பது தவறா? குற்றவாளிகளுக்கு முதலமைச்சர் துணை போவது வேதனை அளிக்கிறது. அதிமுக அனைத்தையும் சந்திக்க சட்டரீதியாக தயாராக உள்ளது. அ.தி.மு.க. வேட்பாளர்கள் வெற்றி பெற்றால் தோல்வி அடைந்ததாக அறிவியுங்கள் என அமைச்சர்கள் வாய்மொழி உத்தரவை பிறப்பித்துள்ளதாக எங்களுக்கு தகவல்கள் வெளியாகியுள்ளன." என்று குற்றம்சாட்டியுள்ளார்.

# முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கைது

சென்னை, பெப். 23

வாக்குச்சாவடிக்குள் அத்துமீறியதாக கூறி தி.மு.க. நபரை சட்டையைக் கழற்ற வைத்து அரை நிர்வாணமாக அழைத்துச் சென்ற விவகாரத்தில், அதிமுக முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் கைது செய்யப்பட்டார்.

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் வாக்குப்பதிவு கடந்த சனிக்கிழமை நடந்தது. சென்னை மாநகராட்சியின் ராயபுரம் சஞ்சீவிராயன் கோயில் தெருவில் அமைக்கப்பட்டிருந்த வாக்குசாவடிக்குள் நரேஷ்



என்பவர் அத்துமீறி நுழைந்ததாக கூறப்படுகிறது. இவர் திமுகவைச் சேர்ந்தவர் என கூறி சத்தம் போட்ட அ.தி.மு.கவினர், நரேஷ் கள்ள வாக்கு போட முயன்றதாக குற்றம்சாட்டினர்.

பின்னர் அவரை அ.தி.மு.கவினர் மடக்கிப் பிடித்தனர். அப்போது முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் முன்னிலையிலேயே நரேஷை சிலர் தாக்கினர். அவரது கையை கட்டும்படி ஜெயக்குமார் கூறினார். இதைத் தொடர்ந்து, அந்த நபரின் சட்டையை கழற்றி கைகளை கட்டினர். அவரை அரை நிர்வாணமாக அழைத்துச் சென்று பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு பட்டினப்பாக்கத்தில் உள்ள வீட்டில் இருந்த ஜெயக்குமாரை தண்டையார் பேட்டை பொலிஸார் கைது செய்தனர்.

# 22 வயதான பெண் வேட்பாளர் வெற்றி

சென்னை, பெப். 23

திருச்சி மாவட்டம் துவாக்குடி நகராட்சியில் சுயேட்சை வேட்பாளர் 22 வயதான ஸ்னேகா 496 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

தமிழகத்தில் 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 489 பேரூராட்சிகளுக்கான நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் கடந்த 19ஆம் திகதி நடைபெற்றது.

இந்நிலையில், பதிவான வாக்குகளை எண்ணும் பணி நேற்ற காலை 8 மணிக்கு தொடங்கியது. இதில், திருச்சி மாவட்டம் துவாக்குடி நகராட்சியில் சுயேட்சை வேட்பாளர் 22 வயதான



ஸ்னேகா 496 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

# உள்ளூராட்சி தேர்தலை நடத்த பஸில் விருப்பம்!

## தவிர்க்க கோருகின்றனர் மூத்த அமைச்சர்கள்



கொழும்பு, பெப். 23

**கட்சியை அடிமட்டத்தில் இருந்து பலப் படுத்துவதற்கு முதலில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தவேண்டும் என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.**

வருட இறுதியில் அல்லது அடுத்த வருடத்தில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறலாம் என்ற பேச்சுக்கள் மத்தியில் நிதி அமைச்சர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இருப்பினும் தற்போதுள்ள பிரச்னைகளுக்கு மத்தியில் தேர்தலுக்கு தயாராக இல்லை என கூறி அரசாங்கத்தின் மூத்த அமைச்சர்களால் இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

அந்நிய செலாவணி நெருக்கடி, அதிக வாழ்க்கைச் செலவு மற்றும் எரிபொருள் பிரச்னை என்பன நாட்டில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதை சுட்டிக்காட்டியே அவர்களால் இந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இதேவேளை, எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்குள்ளும் ஏற்பட்டுள்ள நிச்சயமற்ற நிலைகள் மற்றும் பிளவுகள் காரணமாக அவர்களும் தேர்தலுக்கு பின்வாங்குவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# சீனா இலங்கையின் உண்மை நண்பன்!

## கூறுகிறார் அமைச்சர் விமல்



கொழும்பு, பெப். 23

சீனா இலங்கையின் உண்மையான நண்பன் என்றே தான் கருதுவதாக கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த அவர், இலங்கைக்கு உதவிகளை வழங்குவதற்கு சீனா எந்த அரசியல் நிபந்தனையையும் முன்வைத்ததில்லை.

சீனா மற்றும் இலங்கைக்கு வரலாற்று ரீதியாக தொப்புள் கலாசார தொடர்புகள் உண்டு.

யுத்த காலத்தில் அவர்களின் உதவி இல்லையெனில் சர்வதேசத் தடைகளை இலங்கை எதிர்கொண்டிருக்கும்-என்றார். (அ)

## ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்:

# மைத்திரிக்கு எதிராக காய் நகர்த்தும் ஐ.தே.க.

கொழும்பு, பெப். 23

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர வெளிப்படுத்திய தகவல் குறித்து புதிய விசாரணை ஒன்றை நடத்தவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அந்தக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன, அனைத்து அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளக் கூடிய குழுவொன்றின் மூலம் புதிய விசாரணை நடத்தப்பட வேண்டும்.

தாக்குதல்கள் இடம்பெற முன்னரே புலனாய்வுப் பிரிவினர் அறிந்திருந்த தகவல்களை பாதுகாப்புச் சபையில் தெரிவிப்பதற்கு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இருப்பினும் அக்கூட்டத்தில் பங்கேற்பதற்கான சந்தர்ப்பத்தை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்படுத்திக் கொடுக்கவில்லை.

அத்தோடு புலனாய்வுப் பிரிவினர் அறிந்து வைத்திருந்ததாக தெரிவிக்கப்படும் தகவல்கள் குறித்து மேலதிக விசாரணைகளை முன்னெடுக்குமாறு பாராளுமன்ற தெரிவுக் குழுவின் அறிக்கையிலும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது

ஆகவே இவ்வாறு தேசிய பாதுகாப்பை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ள நபர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்காக நடவடிக்கையை துரிதப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார்.(அ)



# மலையக தமிழர் அபிலாஷைகள் ஆவணம் இறுதி வடிவம் பெற்றது

கொழும்பு, பெப். 23

“இலங்கை தேசிய தளத்தில் முழுமையான பிரஜைகளாகும், மலையக தமிழ் மக்களது, அபிலாஷைகள் மற்றும் இலங்கை-இந்திய ஒப்பந்தங்கள்” என்ற தலைப்பில் நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்து மலையக தமிழ் மக்களது அரசியல் ஆவணம் இறுதி வடிவம் பெற்றுள்ளது என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் அறிவித்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் எம்.பிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஆகியோரது பங்குபற்றலுடன், சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் கொழும்பு மன்டரீனா விடுதியில் நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்து மனோ எம்பி மேலும் கூறியதாவது:

இந்த ஆவணம் இலங்கை அரசு, இந்திய அரசு, தமிழக அரசு, பிரித்தானிய அரசு ஆகியவற்றுக்கு சமர்ப்பிக்கப்படும். இலங்கையின் அரசியல் கட்சிகளுக்கும், மலையக சிவில் சமூக அமைப்புகளுக்கும் மேலதிக கலந்துரையாலுக்காக வழங்கப்படும்-என்றார். (அ)

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட ஆறு பேர் புதுக்குடியிருப்பில் சிக்கினர்!

முல்லைத்தீவு, பெப். 23

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஆறு பேர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். விசேட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கைதானவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். (அ)

# இலங்கையில் டெங்கு தாண்டவம்!

## 52 நாட்களில் 9,809 நோயாளர்கள் அடையாளம்!




கொழும்பு, பெப். 23

இவ்வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 9 ஆயிரத்து 809 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் அனோஜா வீரசிங்க இதனைத் தெரிவித்தார்.

டெங்கு நுளம்புகளின் பெருக்கத்துக்கு 40 தொடக்கம் 45 வீதம் வரையான கழிவுப் பொருட்களே காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, மக்கள் அனைவரும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (அ)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் விபத்தால் பாதிப்புற்ற மீனவர்களுக்கு இரண்டாம் கட்ட இழப்பீடு

கொழும்பு, பெப். 23

கடந்த வருடம் மே மாதம் 20 ஆம் திகதி தீ பரவலுக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இரண்டாம் கட்ட நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக 1.75 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை எதிர்வரும் வாரம் தொடக்கம் நட்டஈடாக வழங்கப்படவுள்ளதாக அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால் வளர்ப்பு, கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மீன்பிடி நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கப்பட்ட வலயங்களாக பெயரிடப்பட்ட கம்பஹா, கொழும்பு, களுத்துறை மாவட்டங்களைச் சேர்ந்த 15 ஆயிரம் கடற்றொழிலாளர்களுக்கு முதலாம் கட்டத்தின் கீழ், கப்பல் பாதுகாப்பு நிறுவனத்தினால் 420 மில்லியன் ரூபா நட்டஈடாக வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# உக்ரைனில் உள்ள 40 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் குறித்து ஆலோசனை

கொழும்பு, பெப். 23

உக்ரரைனில் இடம்பெற்று வரும் அண்மைக்கால விடயங்கள் தொடர்பில் உன்னிப்பாக அவதானித்து வருவதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அங்காராவில் உள்ள இலங்கைத் தூதரகம், உக்ரைனில் வசிக்கும் பதினான்கு மாணவர்கள் உட்பட நாற்பதுக்கும் மேற்பட்ட இலங்கைப் பிரஜைகளின் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதி செய்யும் நோக்கில் நெருங்கிய தொடர்பில் உள்ளது.

உக்ரைனில் உள்ள பதினான்கு இலங்கை மாணவர்களில் ஆறு பேர் தற்காலிகமாக நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில், அங்காராவிலுள்ள இலங்கைத் தூதரகம் எஞ்சிய எட்டு மாணவர்களுடன் நெருங்கிய தொடர்பில் உள்ளது எனவும் இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

உக்ரைனில் உள்ள அனைத்து இலங்கைப் பிரஜைகளும் அவதானத்துடன் செயற்படுமாறும், அங்காராவில் உள்ள இலங்கைத் தூதரகத்துடன் தொடர்பில் இருக்குமாறும் வெளிவிவகார அமைச்சு கேட்டுள்ளது.

உக்ரைனுக்கு அத்தியாவசியமற்ற பயணங்களை மேற்கொள்வதை தற்போது தவிர்த்துக் கொள்ளுமாறு அனைத்து இலங்கைப் பிரஜைகளையும் அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (அ)

# எல்லோரும் கண்ட கனவு பகல் கனவாகியுள்ளது!

## உதயகுமார் எம்.பி. சாடல்!

கொழும்பு, பெப். 23

**“ஆட்சிக்கு வரும் போது பலர் பல்வேறு கதைகளைக் கூறினார்கள். அவர் கண்ட கனவு நனவாகின்றது. இவர் கண்ட கனவு நனவாகின்றது என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், இப்போது எல்லோரும் கண்ட கனவு பகல் கனவாக மாறியுள்ளது.”**

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவருமான எம். உதயகுமார் தெரிவித்தார்.

கொட்டகலை, போகாவத்தை பகுதியில் முன்னாள் அமைச்சரும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தலைமையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

மலையகத்தைப் பொறுத்த வரையில் அமைச்சர் திகாம்பரம் அமைச்சராக இருந்தபோது மலையக மக்களுக்கு பாரிய அளவில் சேவை செய்தார். தனி வீடுகளைக் கட்டிக்கொடுத்தார்.

அவர் உரிமைகளைப் பெற்றுக்கொடுத்தார். மக்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொடுத்தார். ஆனால், அதற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்தவர்கள் ஒரு வீடமைப்புத் திட்டத்தைக் கூட ஆரம்பிக்கவில்லை. மாறாக கனவு கண்டுகொண்டிருக்கின்றார்கள்.

கடந்த காலங்களில் சிறந்த முறையில் சேவையாற்றியதற்காக மலைநாட்டுப் புதிய கிராமங்கள் வீடமைப்பு அமைச்சுக்கு விருது கிடைத்தது. இப்போது விருது வழங்க வேண்டும் என்றால் வேலை செய்யாமைக்காகவே விருது வழங்க வேண்டும்.

இன்று பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் பல்வேறு இன்னல்கள் அனுபவித்துக்கொண்டிருக்கின்றார்கள். மூன்று வேளை சாப்பிட முடியாது மிகவும் துன்பப்படுகின்றார்கள். ஆனால், இன்றுள்ளவர்கள் உல்லாசப் பூங்கா அமைத்துக் கொண்டிருக்கின்றார்கள்-என்றார். (அ)



# தமிழ், சிங்கள மொழிகளை கற்கும் அமெரிக்கத் தூதுவர்

கொழும்பு, பெப். 23

இலங்கைக்கான புதிய அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தமிழ் மற்றும் சிங்கள மொழி கற்கும் புகைப்படங்கள் சிலவற்றை டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

சிறிய பதிவொன்றை பதிவிட்ட அவர், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளைக் கற்றுக் கொள்வது தகவல் தொடர்புக்கு மாத்திரமல்ல நாட்டின் கலாசாரம் மற்றும் வரலாற்றைக் கற்பதற்கும் உதவும் என்றும் குறிப்பிட்டார்.

“எனது உச்சரிப்பு சரியாகிவிடும் என்று நான் நம்புகிறேன்!” என மூன்று மொழிகளிலும் அவர் பதிவிட்டுள்ளார்.

இலங்கைக்கான புதிய அமெரிக்க தூதுவராக ஜூலி சங் பதவியேற்பதற்காக கடந்த 18ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்தார்.

இலங்கையில் இருந்து திரும்பிய பின்னர், அவர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் கணக்கில் இலங்கையர்களுக்கு உரையாற்றும் வகையில் விசேட குறிப்பொன்றையும் பதிவிட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இறுப்பிட்டி மக்கள் நலன்கருதி புதிதாக பஸ் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 23

புங்குடுதீவு-இறுப்பிட்டி பகுதி மக்களின் நலன்கருதி புதிய பேருந்து சேவை ஒன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை இலங்கை போக்குவரத்துச் சபையால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

புங்குடுதீவு-இறுப்பிட்டி பகுதி மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முன்வைத்திருந்த கோரிக்கைக்கு அமைவாக புதிய பஸ் சேவை இறுப்பிட்டி அரியனார் பிள்ளையார் ஆலய முன்றலிலிருந்து முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ் சேவையானது புங்குடுதீவு பெருங்காட்டு சந்தியூடாக இறுப்பிட்டி கேரதீவு மடத்துவெளியை சென்றடைந்து யாழ்ப்பாணத்துக்கான சேவையை முன்னெடுக்கவுள்ளது. (அ)

# தேர்தல் முறை குறித்து ஆராய நாளை கூடுகிறது தெரிவுக்குழு

கொல்ழும்பு, பெப். 23

அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் உள்ளிட்ட பல பாராளுமன்றக் குழுக்கள் இவ்வாரம் கூடவுள்ளன.

அதற்கமைய, தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளங்காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு 24 ஆம் திகதி கூடவுள்ளது.

மேலும், இன்று தொழில் அமைச்சுசார் ஆலோசனைக் குழு மற்றும் காணி அமைச்சுசார் ஆலோசனைக்குழு என்பன கூடவுள்ளன. (அ)

# ஜி.எஸ்.ரி வரி சட்டமூலம் அரசமைப்புக்கு முரண்!

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, பெப். 23

ஜி.எஸ்.டி. வரி தொடர்பான சட்டமூலத்தில் உள்ள சரத்துக்கள் அரசியலமைப்பிற்கு முரணானவை என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற அமர்வை தொடங்கிவைத்து உரையாற்றும்போதே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இதனை தெரிவித்தார்.

விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி (ஜி.எஸ்.ரி.) சட்டமூலத்தின் சில சரத்துகள் அரசியலமைப்புக்கு ஏற்புடையதல்ல எனத் தெரிவித்து உயர் நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

மேலும் அதனை நிறைவேற்ற வேண்டுமாயின், பாராளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை, சர்வஜன வாக்கெடுப்பினாலும் அங்கீகரிக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்நிலையிலேயே நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை சபாநாயகர் நேற்று பாராளுமன்றில் அறிவித்தார். (அ)

# இலங்கைக்கு 2 விமானங்கள் வழங்கவுள்ளது அமெரிக்கா!

கொழும்பு, பெப். 23

இரண்டு கடல்சார் கண்காணிப்பு விமானங்களை இலங்கை அரசாங்கத்துக்கு இலவசமாக வழங்க அமெரிக்க அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளதாக இலங்கை விமானப் படை தெரிவித்துள்ளது.

இலங்கை விமானப்படை மூலம் இயக்கப்படும் வெளிநாட்டு இராணுவ விற்பனை ஒப்பந்தத்துக்கு அமையவே விமானங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் முதல் விமானம் 2022 இன் பிற்பகுதியில் அல்லது 2023 இன் முற்பகுதியில் விமானப்படைக்கு வழங்கப்படும் என விமானப்படை பேச்சாளர் துஷான் விஜேசிங்க தெரிவித்தார்.

தற்போதைய விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரனவின் வேண்டுகோளுக்கமைய, இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயத்தில் கடல்சார் கண்காணிப்பு திறனை வலுப்படுத்துவதற்காக 2 விமானங்களை விமானப்படைக்கு வழங்குவதற்கு அமெரிக்க அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

டெக்ஸ்ட்ரான் ஏவியேஷன் தயாரித்த பீச்கிராப்ட் 360ஈஆர் இரட்டை-டர்போபிராப் விமானத்தை விமானப்படை கோரியிருந்ததாக அவர் தெரிவித்தார்.

இது அமெரிக்காவிலுள்ள பெடரல் ஏவியேஷன் அட்மினிஸ்ட்ரேஷன் மற்றும் ஐரோப்பிய விமானப் பாதுகாப்பு முகவரகம் ஆகியவற்றால் சான்றளிக்கப்பட்ட இலகு ரக போக்குவரத்து விமானமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# பஸ்களை இயக்க டீசல் இல்லை 300 நீண்ட தூர பஸ்கள் நிறுத்தம்

கொழும்பு, பெப். 23

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மாகாணங்களுக்கு இடையிலான சுமார் 300 தனியார் பஸ்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக மாகாணங்களுக்கிடையிலான தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் ஒழுங்குபடுத்தப்படும் மாகாணங்களுக்கிடையிலான தனியார் பஸ்கள் சுமார் 3,200 உள்ளதாகவும், அவற்றில் சுமார் 2,000 பஸ்கள் தற்போது இயங்கி வருவதாகவும் அதன் தலைவர் சரத் விஜித குமார சுட்டிக்காட்டினார்.

2,000 பஸ்களில் இதுவரை 300 இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த நிலை தொடருமானால் பஸ்களை இயக்க முடியாமல் பயணிகள் கடும் சிரமங்களைச் சந்திக்க நேரிடும் என அவர் மேலும் கூறினார்.

சில பகுதிகளில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வழமையான டீசல் இல்லை எனவும் சுப்பர் டீசலை அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# நாட்டில் வாகன ரயர்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

கொழும்பு, பெப். 23

நாட்டில் வாகன ரயர்களுக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க டொலர் பற்றாக்குறை காரணமாக இந்த நிலைமை உருவாகியுள்ளது.

எதிர்வரும் மே மாதமளவில் நாட்டில் அமெரிக்க டொலர்களுக்கு தட்டுப்பாட்டு நிலை உருவாகும் என ரயர் இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சில வர்த்தகர்கள் ரயர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக போலியான தட்டுப்பாட்டை தற்போதே உருவாக்கி வருவதாக ஆசிய ரயர் இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆண்டுதோறும் இலங்கைக்கு சுமார் 31 இலட்சம் ரயர்கள் தேவைப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

பதினெட்டரை இலட்சம் ரயர்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

எஞ்சிய சுமார் 41 வீதமான ரயர்கள் இறக்குமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க டொலர் தட்டுப்பாட்டினால் வாகனங்களுக்கான ரயர்களை இறக்குமதி செய்து கொள்வதில் நெருக்கடி நிலை உருவாகியுள்ளது என இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

## கனகராயன்குளத்தில் இருவரை மோதி தள்ளியது பாரவூர்த்தி!

# தந்தை கண்முன்னே மகள் சாவு!!

வவுனியா, பெப். 23

வவுனியா கனகராயன்குளம் பகுதியில் இன்று காலை இடம்பெற்ற விபத்தில் 33 வயதான பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரது தந்தை படுகாயமடைந்தார்.

கனகராயன்குளம் பகுதியில் பஸ்ஸூக்காக காத்திருந்த தந்தையும் மகளும் அவ்வீதியால் வந்துகொண்டிருந்த பஸ்ஸை வழிமறித்து அதில் ஏறமுற்பட்டனர்.

இதன்போது வவுனியாவில் இருந்து யாழ்.நோக்கி சென்று கொண்டிருந்த லொறி கட்டுப்பாட்டை இழந்து குறித்த



இருவரையும் மோதியது.

விபத்தில் பஸ்ஸூக்காக காத்திருந்த சிவசுப்பிரமணியம் சிந்துயா (வயது 33) என்ற பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரது தந்தை படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

லொறி அதிக வேகமாக வந்தநிலையில் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் விபத்து இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக கனகராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## மேலும் 207 பேர் குணமடைவு!

கொழும்பு, பெப். 23

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 207 பேர் குணமடைந்துள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 607,326 ஆக அதிகரித்துள்ளது. (அ)

## யாழ்.இராசாவின் தோட்டப் பகுதியில் நேற்று மூதாட்டி அடித்து படுகொலை!

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டப் பகுதியில், தனிமையில் இருந்த மூதாட்டி அடித்து படுகொலை செய்யப்பட்டுள்ளார் என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு அடித்து படுகொலை செய்யப்பட்டவர் அதே பகுதியைச் சேர்ந்த காணிக்கையம்மா ஜெயசீலி பூபதி (வயது-72) என தெரிவிக்கப்பட்டது.

குறித்த மூதாட்டி நேற்று மதியம் அடித்து படுகொலை செய்யப்பட்டுள்ளார் என யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிஸார் கூறினர்.

கதிரையில் இருந்து ஜெபித்துக் கொண்டிருந்தபொழுது குறித்த மூதாட்டி பின் பக்கமாக வந்த மர்ம நபர்கள் அடித்துப் படுகொலை செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொள்ளைச் சம்பவத்துக்கு வந்தவர்களே இதனைச் செய்திருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்படுகிறது.

மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## 11 இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு!

யாழ்ப்பாணம், பெப். 23

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 11 இந்திய மீனவர்களின் விளக்கமறியல் மார்ச் மாதம் 8ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று காலை வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிவான் ஜெ.கஜநிதிபாலனால் இந்த உத்தரவை பிறப்பிக்கப்பட்டது.

கடந்த 7ஆம் திகதி இரவு நெடுந்தீவு அருகே இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மூன்று படகுகளையும் அதில் இருந்த 11 மீனவர்களையும் கைது செய்தனர்.

தொடர்ந்து குறித்த மீனவர்கள் கடந்த 8 ஆம் திகதி கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரால் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட நிலையில் மீனவர்களை 22 ஆம் திகதிரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சந்தேக நபர்கள் மன்றில் முற்படுத்தப்படாத நிலையில் மீனவர்கள் சார்பில் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத்தூதரக அதிகாரி ஒருவர் மன்றில் பிரசன்னமாகியிருந்தார்.

இதன்போது கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளால் குறித்த மீனவர்களிடம் கொரோனா தொற்று அச்சம் காரணமாக வாக்கு மூலம் பெறவில்லை எனவும் ஆகவே சந்தேகநபர்களிடம் வாக்கு மூலம் பெற அனுமதி வழங்குமாறும், அதுவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் விண்ணப்பம் செய்யப்பட்டது.

இதனையடுத்து குறித்த 3 வழக்குகளின் விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்ட நீதவான், மீனவர்களிடம் வாக்குமூலம் பெற அனுமதியளித்ததுடன், சந்தேகநபர்களை எதிர்வரும் மார்ச் மாதம் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், அன்றைய தினம் சந்தேக நபர்களை மன்றில் முற்படுத்துமாறும் உத்தரவிட்டார். (அ)



## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து இறுதி அறிக்கை பாராளுமன்றத்தில்

கொழும்பு, பெப். 23

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை மற்றும் சாட்சிகள் உட்பட அனைத்து தொகுதிகளும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

88 தொகுதிகளைக் கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை நேற்றுக் காலை ஜனாதிபதி சட்டப் பணிப்பாளர் நாயகம் ஹரிகுப்த ரோஹணதீரவினால் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் விசாரணையில் தெரியவந்த விடயங்கள் பொதுமக்களுக்கு தெரியப் படுத்தப்படவேண்டும் என்பதுடன், அது தொடர்பான கோப்புகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் பாராளுமன்ற உறுப்பினர்களின் மேலதிக பரிசீலனைக்காக பாராளுமன்றத்தில் கையளிக்கப்பட்டது. (அ)

## பொதுமக்கள் வாக்காளராக பதிவு செய்யும் அவசியத்தை வலியுறுத்தி விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், பெப். 23

பொதுமக்கள் வாக்காளராக பதிவு செய்வதன் அவசியத்தை வலியுறுத்தி விழிப்புணர்வு நிகழ்வொன்று சாவகச்சேரியில் இடம்பெற்றது.

விழிப்புணர்வு சைக்கிள் பேரணியும் அதன் பின்னர் வாக்குரிமை அளித்தல், வாக்காளராக பதிவு செய்வது தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்வுகள், நாடகங்கள் என்பனவும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுகளில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர்(காணி) முரளிதரன், மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ், பிரதேச செயலர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்,கிராம சேவகர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

## பிக்குவால் சிறுவன் துஷ்பிரயோகம் வட்டவளையில் மக்கள் போராட்டம்

கொழும்பு, பெப் 23

வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டவளை, ஹயிற்றி தோட்டத்திலுள்ள விகாரைக்கு முன்பாக நீதிகோரி நேற்று கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தோட்ட மக்கள், சிறார்கள் என பலர் இப்போராட்டத்தில் பங்கேற்று நீதிக்காக கோஷம் எழுப்பினர்.

வட்டவளை, டெம்பல்ஸ்ட்டோவ் தோட்டத்திலுள்ள சிறுவன் ஒருவரை, ஹயிற்றி தோட்டத்தில் உள்ள விகாரையின் பிக்கு, துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட சிறுவனின் தந்தையால் வட்டவளை பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனையடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய பிக்கு வட்ட வளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பாதிக்கப்பட்ட சிறுவன் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.



இந்நிலையிலேயே குறித்த சிறுவனுக்கு நீதி கோரியும், ஏனைய சிறார்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியும், மேற்படி பிக்குவுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப் படவேண்டும் என அழுத்தம் கொடுத்தும் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

டெம்பல்ஸ்ட்டோவ் தோட்டத்தில் திரண்ட போராட்டக்காரர்கள், பதாதைகள் தாங்கி, கோஷங்களை எழுப்பியவாறு ஹயிற்றி தோட்டத்துக்கு சென்றனர். அங்கு விகாரையின் முன் அமர்ந்து போராட்டத்தை முன்னெடுத்தனர். இது தொடர்பில் பொலிஸாரிடமும் வேண்டுகோள் விடுத்தனர்.

"இந்த பிக்கு இனியும் இப் பகுதிக்கு வேண்டாம். நாம் பிக்குகள் வேண்டாம் என சொல்லவில்லை. இப்படியான பிக்கு வேண்டாம் என்றே கூறுகின்றோம்." என தோட்ட மக்கள் தெரிவித்தனர். (அ)

# புதிய அரசியலமைப்பும் மாகாண சபைகளும்

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பாக பணி யாற்ற நியமிக்கப்பட்ட குழுவினர் தமது அறிக்கையை இம்மாத முடிவுக்குள் சமர்ப்பிக்கவுள்ளனர் எனவும், அதனையடுத்து அது அமைச்சரவையின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டு, பின் பாராளுமன்றத்தில் பகிரங்க விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டால் அது இலங்கையின் 4ஆவது அரசியலமைப்பாக அமையும். சிறீலங்கா பொதுஜன பெரமுனவைப் பொறுத்தவரையில் உள்ளக முரண்பாடுகள் நிலவுவதாக வெளியில் தோன்றினாலும் இப்படியான சந்தர்ப்பங்களில் அவர்களால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை உருவாக்கிவிட முடியும் என்பது அவர்களின் கடந்தகால வரலாறாகும்.

உத்தேச புதிய அரசியலமைப்பு தொடாபான தகவல்கள் சில சிங்கள ஊடகங்களில் வெளியாகியுள்ளன. அதில் தமிழ் மக்களின் கவனத்தை ஈர்க்கும் ஒரு விடயமும் முக்கியமானதாகும். அதாவது 13ஆம் அரசியலமைப்புத் திருத்தத்திற்கமைவாக அமைக்கப்பட்ட மாகாண சபை முறைமை புதிய அரசமைப்பில் நீக்கப்படுமென ஒரு பிரபல சிங்களப் பத்திரிகை தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே இலங்கையின் தற்போதைய நிதியமைச்சர் பஸில் ராஜபக்க்ஷ அடிக்கடி இனப்பிரச்னைத் தீர்வுக்கு உள்ளூராட்சி சபைகளைப் பலப்படுத்துதல், அதாவது பஞ்சாயத்து அமைப்பு முறையிலான அதிகாரப் பரவலாக்கமே ஒரே வழி எனக் கூறிவரும் நிலையில் மேற்படி செய்தி உண்மையாகவே அமைந்திருக்குமென நம்பக் கூடியதாயுள்ளது.

இதுவரைத் தமிழ் மக்கள் இலங்கைத் தீவில் உரிமையுள்ள ஒரு தேசிய இனமாக வாழவேண்டுமென்பதற்காக நடத்திய போராட்டங்களும், செய்த தியாகங்க ளும் சந்தித்த இழப்புகளும் கொஞ்ச நஞ்சமல்ல. உலகில் இடம்பெற்ற எந்த வொரு விடுதலைப் போராட்டத்துக்குக் குறைந்தாகக் கருதமுடியாதளவு இலட்சிய உறுதியும் வீரமும் அர்ப்பணிப்புகளும் நிறைந்ததாகவே எமது போராட்டமும் வரலாற்றில் அதனைப் பதிவு செய்துள்ளது.

ஜனநாயக அடிப்படையிலான அஹிம்சைப் போராட்டங்கள் முதல் ஆயுதப் போராட்டங்கள் வரை வீரத்துடன் இடம்பெற்ற போராட்டம் 2009இல் முள்ளிவாய்க்கால் இறுதிச் சமருடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும்கூட நாம் இன்று ஒரு வெற்றிடத்தில் இல்லை. எமது அஹிம்சை மற்றும் ஆயுதப் போராட்டங்களின் பின்பு எங்களிடம் எஞ்சிக்கிடப்பது 13ஆவது அரசியலமைப்புச் சட்டமும், அதை அடிப்படையாகக் கொண்ட பல அதிகாரங்கள் பறிக்கப்பட்ட மாகாண சபையும் மட்டும்தான்.

நிச்சயமாக இனப் பிரச்னைக்கு நியாயபூர்வமான தீர்வை எட்டவும் எமது குறைந்த பட்ச அபிலாஷைகளை நிறைவு செய்யவும் மாகாண சபைகளால் முடியாது என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை. ஆனால் இன்று எஞ்சிக் கிடப்பது அது மட்டும்தான் என்ற உண்மையும் அதைக் கூட இழந்து விடக்கூடாது என்ற தேவையும் அவசியம் உணரப்பட வேண்டிய உண்மையாகும்.



**இனப் பிரச்சினைக்கு நியாயபூர்வமான தீர்வை எட்டவும் எமது குறைந்த பட்ச அபிலாஷைகளை நிறைவு செய்யவும் மாகாண சபைகளால் முடியாது என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை. ஆனால் இன்று எஞ்சிக் கிடப்பது அது மட்டும்தான் என்ற உண்மையும் அதைக் கூட இழந்து விடக்கூடாது என்ற தேவையும் அவசியம் உணரப்பட வேண்டிய உண்மையாகும்.**



இந்த நிலையில்தான் புதிய அரசியலமைப்பில் மாகாண சபை முறைமை நீக்கப்படும் என்ற செய்தி வெளியாகியுள்ளது.

ஏறக்குறைய 60 வருடங்கள் நடத்திய உரிமைப் போராட்டத்தின் பலனாக எம்முன்னால் எஞ்சிக் கிடப்பது இந்தப் 13ஆவது அரசியலமைப்புச் சட்டம் மட்டுமே என்பதை நாம் ஒப்புக் கொண்டேயாக வேண்டும்.

மாகாண சபைகள் சட்டம் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. அது இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு அமைவாகவே நிறைவேற்றப்பட்டது.

இலங்கை இந்திய ஒப்பந்தம் என்பது இந்தியா, இலங்கை என இரு நாடுகளுக்கிடையே உருவாக்கப்பட்ட ஒரு உடன்படிக்கையாகும். அவ்வகையில் அதற்கு நாடுகளின் எல்லைதாண்டிய ஒரு சர்வ

**நா.யோகேந்திரநாதன்**

தேச அந்தஸ்து உண்டு.

அதுமட்டுமின்றி இலங்கையின் இனப் பிரச்னைத் தீர்வு காண 13ஆவது அர சியலமைப்புத் திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்படவேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்தியிருந்தார். அது மனித உரிமைகள் பேரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

எனவே 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் இலங்கையின் எல்லைக்குள் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. அது சர்வதேச மயப்படுத்தப்பட்டது என்பதை மேற்படி இரு விடயங்களும் தெளிவுபடுத்தியுள்ளன.

எனவே போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், பயங்கரவாத தடைச் சட்டம் உட்பட்ட முறை மீறல்கள் உள்நாட்டு விவகாரங்களெனவும் அவற்றுக்கு உள்நாட்டிலேயே தீர்வு காண முடியுமெனக் கூறி வருவது போன்று 13ஆவது திருத்தத்துக்கு சாட்டுகள் முன்வைக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளை மேலும் தீவிரமாக ஆளும் தரப்பினர் தொடர்வதற்கு 13ஆவது திருத் தச் சட்டத்தை நீக்க வேண்டியுள்ளது. நேரடியாக அதை நீக்கினால் அது இலங்கை இந்திய உறவில் சிக்கல்களை ஏற்படுத்தும். எனவேதான் ஒட்டு மொத்தமாக புதிய அரசியலமைப்பை உருவாக்குவதன் மூலம் 13ஆவது திருத்தம் வழங்கக்கூடிய அழுத்தம் இல்லாமற் செய்யப்பட முயற்சிக்கப்படுகிறதா என்ற கேள்வி எழுகிறது.

இப்படியான நிலையில் இச் சட்டம் இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் அடிப்படையிலானது என்ற வகையில் இது தொடர்பாக அக்கறை செலுத்தும் உரிமை இந்தியாவுக்கு உண்டு.

அந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட 7 கட்சிகள் இணைந்து இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும்படி இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு கோரி இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் சில புலம்பெயர் தமிழர்களும் இந்நடவடிக்கை தொடர்பாகக் கடும் கண்டனங்களை வெளியிட்டுள்ளனர். இது இனப்பிரச்னைத் தீர்வை 13ஆவது திருத்தத்துக்குள் முடக்கும் சதி என்றும் கூறி வருகின்றனர்.

13ஆவது திருத்தம் தொடர்பாக இவர்களும் அரசாங்கமும் ஒரே நிலைப் பாட்டில் உள்ளதை அவதானிக்கலாம். அது மட்டுமின்றி 13ஆவது திருத்தத்தை தமிழ் மக்களில் ஒரு பகுதியினரும் எதிர்க் கின்றனர் என்ற காரணத்தை அரசாங்கம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்து வதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தக்கூடுமோ என்ற கேள்வியும் எழச் செய்கிறது.

13ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றப் போதுமானதல்ல என்பதை எல்லாத் தமிழ்த் தரப்பும் ஏற்றுக்கொள் கின்றனர். ஆனால் இருக்கும் ஒரு வாய்ப்பை இழக்கக்கூடாது என்பதுதான் அதை நீக்க அனுமதிக்கக்கூடாது என்று கோருவதற்கான அடிப்படையாகும்.

ஆனால் 13ஆவது திருத்தத்தை நிராகரிப்பவர்களிடம் அதற்கு உகந்த வேறு வேலைத்திட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. அதேவேளை 6 கட்சிகளும் கடிதத்தை அனுப்பி விட்டு ஓய்வெடுக்கப் போகிறார்களா அல்லது அடுத்த கட்டத்தை நோக்கி நகரப் போகிறார்களா என்ற கேள்வியும் உண்டு.

அறிக்கை அரசியலும், வீராவேசப் பிரகடனங்களும்தான் தமிழ்த் தலைமைகளின் அரசியல் என இருக்கும் வரை விமோசனம் கிட்ட வழி பிறந்துவிடப் போவதில்லை என்பதுதான் 2009இன் பின்பு கடந்த கால அனுபவம் தரும் பாடமாகும். இனியாவது தமிழ்த் தேசியத்தைப் பேசும் தலைமைகள் அறிக்கைகளுடனும் ஊடகசந்திப்புக்களுடனும் வீராவேசச் சவால்களுடனும் தாங்கள் அரசியல் பணிகளை மட்டுப்படுத்துவதற்கு அப்பால் நடைமுறைச் சாத்தியமான வழிகளில் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

- நன்றி:அருவி

# உக்ரைனின் கிழக்கே டொன்பாஸில் தனி நாடுகளுக்கு புடின் அங்கீகாரம்!

## பூகோள அரசியல் போட்டியால் பூமிப் பந்தில் புதிய தேசங்கள்..



**பாரிஸிலிருந்து குமாரதாஸன்**

**டொன்பாஸில் இரண்டு குடியரசுகளையும் அங்கீகரித்ததன் மூலம் அவ்விரு நாடுகளையும் பாதுகாப்பதற்காக -அவற்றின் அழைப்பின் பேரில் - ரஷ்யப் படைகள் அங்கு அனுப்பப்படுவதற்கு வாய்ப்புள்ளது. ஆனால் அவ்வாறு படைகள் தனது எல்லைகளுக்குள் நுழைவதை உக்ரைன் அனுமதிக்காது. இதன் மூலம் அப்பிராந்தியம் நிரந்தரமான போர் பதற்றத்தை நோக்கி நகர்கிறது.**



உக்ரைன் நாட்டின் கிழக்குப் பகுதியில்- டொன்பாஸ் பிராந்தியத்தில்-கிளர்ச்சியாளர்களது கட்டுப்பாட்டில் உள்ள இரண்டு நிலப் பிரதேசங்களைத் தனி நாடுகளாக அங்கீகரித்திருக்கிறது ரஷ்யா.

ஜனாதிபதி விளாடிமிர் புடின் நாட்டுக்கு ஆற்றிய தொலைக்காட்சி உரையில் தனிநாட்டு அங்கீகாரணத்துக்கான பிரகடனத்தில் ஒப்பமிடவுள்ளார் என்பதை அறிவித்திருக்கிறார்.

ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சிப் படைகளால் தன்னிச்சையாகவே குடியரசுகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த டொனெட் ஸ்க் (Donetsk) மற்றும் லுஹான்ஸ்க் (Luhansk) ஆகிய இரண்டு பகுதிகளையுமே புடின் சுதந்திர நாடுகளாக அங்கீகரித்திருக்கிறார். இதன் மூலம் மேற்குக்கும் கிழக்குக்கும் இடையேயான பூகோள அரசியல் போட்டி, கிழக்கு ஐரோப்பாவில் இரண்டு புதிய தேசங்கள் தோன்றுவதற்கான வழிகளைத் திறந்துவிட்டிருக்கின்றது.

ஜனாதிபதி புடின் தனது தொலைக்காட்சி உரையில் உக்ரைன் அதிகாரத்தை "அமெரிக்காவின் பொம்மை ஆட்சி" என்று வர்ணித்தார்.ஒரு தேசத்துக்கான எந்தப்பண்புகளையுமோ அடிப்படைகளையுமோ கொண்டிருக்காத அந்த நாடு நேட்டோ வின் யுத்த மேடையாக மாறியிருக்கிறது என்றும் குற்றம் சுமத்தினார். நவீன உக்ரைன் கம்யூனிஸ ரஷயாவினால் உருவாக்கப்பட்ட தேசம். அதன் ரஷ்யத் தொடர்புகள் அனைத்தையும் துண்டித்துவிட்டு அங்கு ஊழல் மிக்க பயங்கரவாத ஆட்சி கட்டியெழுப்பப் பட்டுள்ளது என்றும் அவர் சாடினார்.

புடினின் பிரகடனத்தை ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் கண்டித்து வரு கின்றனர். எவருடைய நகர்வுகளும் உக்ரைன் நாட்டின் இறைமையையும் ஆள்புல ஒருமைப்பாட்டையும் மதிப்ப வையாக இருக்க வேண்டும் என்று ஐ. நா. சபை கூறியி ருக்கிறது.

டொன்பாஸில் இரண்டு குடியரசுகளையும் அங்கீகரித்ததன் மூலம் அவ்விரு நாடுகளையும் பாதுகாப்பதற்காக -அவற்றின் அழைப்பின் பேரில் - ரஷ்யப் படைகள் அங்கு அனுப்பப்படுவதற்கு வாய்ப்புள்ளது. ஆனால் அவ்வாறு படைகள் தனது எல்லைகளுக்குள் நுழைவதை உக்ரைன் அனுமதிக்காது. இதன் மூலம் அப் பிராந்தியம் நிரந்தரமான போர் பதற்றத்தை நோக்கி நகர்கிறது.

சர்வதேச சட்டங்களையும் மின்ஸ்க் உடன்படிக்கையையும் மீறி மொஸ்கோ உக்ரைனின் ஒரு பகுதிக்குத் தனி நாடுகளுக்கான அங்கீகாரத்தை அளித்திருப்பதால் அதன் மீது தடைகளை அறிவிப்பதற்குத் தயாராகிவருவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. ஆனால் மேற்குலகின் தடைகள் எதனையும் மொஸ்கோ கணக்கில் எடுப்பதாக இல்லை.

டொன்பாஸ் (Donbas) என்பது ரஷ்யாவோடு எல்லையைக் கொண்டுள்ள உக்ரைனின் கிழக்குப் பிராந்தியம். 2014 இல் கிரீமியாக் குடாவை ரஷ்யா ஆக்கிரமித்த சமயத்தில் உக்ரைன் படைகளுக்கும் ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே அங்கு சண்டைகள் மூண்டன. அச்சமயம் டொன்பாஸ் பிராந்தியத்தின் டொனெட்ஸ்க் (Donetsk) மற்றும் லுஹான்ஸ்க் (Luhansk) ஆகிய இரண்டு பகுதிகள் கிளர்ச்சிப் படைகளது வசமாகின. அவற்றை அவர்கள் ரஷ்யாவின் ஆதரவோடு தன்னாட்சிக் குடியரசுகளாக நிர்வகித்து வருகின்றனர்.

டொன்பாஸ் பிராந்திய நெருக்கடியைத்தணிப்பதற்காக உக்ரைன் படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே மின்ஸ்க் உடன்படிக்கையின் கீழ் பேணப்பட்டுவந்த யுத்த நிறுத்தம் சமீப நாட்களாகவே மீறல்களைச் சந்தித்துள்ளது. இரு தரப்பினரது கட்டுப்பாட்டு எல்லைப் பகுதிகளில் மோட்டார் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அச்சமயத்தில் ரஷ்யா வெளியிட்டிருக்கின்ற தனி நாட்டு அங்கீகாரம் மின்ஸ்க் உடன்படிக்கையை அடியோடு தூக்கிக் கடாசுவதாக அமைந்துள்ளது.

# பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க அரசாங்கத்தினால் முடியுமா?

## கருத்துக் கணிப்பில் பொது மக்கள் அபிப்பிராயம்

அரசாங்கம் தனது பதவிக் காலத்தில் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் சாத்தியங்கள் இல்லை என்று பெரும்பான்மையானவர்கள் (64% வீதமானவர்கள்) தெரிவித்திருக்கின்றனர் என சோஷல் இன்டிகேட்டரின் "ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டி" ஆய்வு முடிவுகளில் தெரியவந்துள்ளது.




கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்துவதில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என 30% வீதத்தினரும் - ஆனால், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை குறைத்தல் வேண்டும் என நான்கில் ஒரு பகுதியினரும் - பொருளா தார வளர்ச்சியை உறுதி செய்தல் வேண்டும் என நான்கில் ஒரு பகுதியினரும் எதிர்பார்க்கின் றனர் எனவும் ஆய்வு முடிவுகள் கூறுகின் றன.

அதேவேளை, ஒரு வலுவான தலைவர் இருத்தல் (75%) மற்றும் நாடு தொடர்பான முக்கிய விடயங்கள்சார் முடிவுகளை அரசியல்வாதிகள் அல்லாத நிபுணர்கள் தீர்மானித்தல் (87%) போன்ற கருத்தியல்க ளுக்கு மக்கள் ஆதரவு இன் னும் இருப்பதும் ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

மேற்படி விடயங்கள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) கணிப்பீட்டாய்வுப் பிரிவான சோஷல் இன்டிகேட்டரினால் (Social Indicator) மேற்கொள்ளப்பட்ட "ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டி" எனும் அபிப்பிராய ஆய்வு அறிக்கையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களாகும்.

நாட்டின் 25 மாவட்டங்களிலும் உள்ள சிங்கள, தமிழ், மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய நான்கு இனத்தவர்களுடன், கட்டமைக்கப்பட்ட கேள்விக்கொத்தை பயன்படுத்தி 62 தரவு சேகரிப்பவர்களைக் கொண்டு தொலைபேசி ஊடான நேர்காணல்கள் மூலம் இவ்வாய்வு நடாத்தப்பட்டுள்ளது. ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தான்

- **பின்வரும் அட்டவணையை நன்றாக அவதானித்து 39 ஆம் 40 ஆம் வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க.**

கரப்பந்தாட்டப் போட்டி ஒன்றில் ஐந்து வீரர்கள் மூன்று சுற்று விளையாடிய விதம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| சுற்றுக்கள் | லவன் | லக்சன் | நிமல் | நிரஞ்சன் | கமல் |
|---|---|---|---|---|---|
| 1ம் சுற்று | ○ | ◉ | ◉ | ⊗ | ⊗ |
| 2ம் சுற்று | ◉ | ⊗ | ◉ | ◉ | ◉ |
| 3ம் சுற்று | ○ | ○ | ◉ | ○ | ◉ |

மிகநன்று ◉ ஓரளவு நன்று ○ குறைவு ⊗

39) மூன்று சுற்றுக்களிலும் மிக நன்றாக விளையாடியவர் யார்?
(1) லவன் (2) நிமல் (3) லக்சன்

40) முதல் சுற்றில் விளையாடியதை விட 2ஆம் சுற்றில் மிகத் திறமையாக விளையாடாதவர் யார்?
(1) கமல் (2) நிமல் (3) லக்கன்

- **பின்வரும் பந்தியை நன்றாக வாசியுங்கள்**

01) புல்வெளிக்கு அப்பால் ஓர் அடர்ந்த காடு இருந்தது. காட்டின் மத்தியில் அழகான ஏரி. ஏரிக்கரையில் இருந்த புதர்களில் ஒரு வாத்து முட்டைகளை இட்டு அடைகாத்துக் கொண்டிருந்தது. மற்றைய வாத்துக்கள் வாய்க்காலில் சுகமாக நீந்திக் கொண்டிருந்தன. அந்த வாத்திற்கு மற்றைய வாத்துக்களுடன் அரட்டை அடிக்க விருப்பமில்லை.
பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.

i) வாத்து எங்கே முட்டைகள் இட்டு அடைகாத்துக் கொண்டிருந்தது?
............................................................
ii) வினை அடைமொழிச் சொல் ஒன்று எழுதுக.
............................................................
iii) பொழுது போக்க மற்றவர்களுடன் பேசும் பேச்சு எவ்வாறு அழைக்கப்படும்?
............................................................
iv) பந்தியில் கூறப்பட்ட நீர்நிலையின் பெயரை எழுதுக.
............................................................
v) அ∴றிணைப் படர்க்கை பன்மை இறந்த கால வினைச் சொல் ஒன்றினை எழுதுக.
............................................................
vi) "ஐதான" என்பதைக் குறிக்கும் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.
............................................................

02) **அ∴றிணை நிகழ்கால பன்மை வினைச் சொல்லைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.**
(1) ஓடுகின்றார்கள். (2) மேய்ந்தன. (3) பறக்கின்றன.

03) **தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**
எங்களால் / அம்சங்களை / காலி / நுழைந்ததுமே / இரண்டு / நகருக்குள் / காணமுடிந்தது.
............................................................

04) **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் சரி (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக் குறிக்குள் அடையாளம் இடுக.**
i) யானைக் கூட்டம் நீர் அருந்தின. ( )
ii) பறவைகள் வானத்தில் பறக்கும் ( )
iii) அம்மாவுடன் தங்கை கோயிலுக்குச் சென்றார்கள் ( )

05) **பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.**
டெங்குநுளம்பாரே நீர் சொல்வதற்கு ஏதும் உண்டா

## விடைகள்

39) 2
40) 3

01) i) ஏரிக்கரையில் இருந்த புதர்களில்
ii) சுகமாக
iii) அரட்டை
iv) ஏரி
v) நீந்திக் கொண்டிருந்தன.
vi) அடர்ந்த
02) பறக்கின்றன
03) காலி நகருக்குள் நுழைந்ததுமே இரண்டு அம்சங்களை எங்களால் காணமுடிந்தது.
04) i) ×
ii) ✓
iii) ×
05) டெங்குநுளம்பாரே, நீர் சொல்வதற்கு ஏதும் உண்டா?

---

கல்வி tv CHANNEL-1

**16.02.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் மறு ஒளிபரப்பு | மாதிரி வினாத்தாள் மறுஒளிபரப்பு-LIVE கணிதம் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**16.02.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# பெரும்போகத்தில் பாதிக்கப்பட்ட மட்டு. விவசாயிகளுக்கு காப்புறுதி

மட்டக்களப்பு, பெப். 23

**கடந்த பெரும்போகத்தில் இழப்புக்களை எதிர்கொண்ட மட்டக்களப்பு விவசாயிகளுக்கு வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை முதல் இழப்பீட்டு காப்புறுதி வழங்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.**

பெரும்போகத்தில் பாதிப்புக்களை எதிர்கொண்ட விவசாயிகளுக்கு இழப்பீடு காப்புறுதி வழங்குவது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுக்கும் விவசாய அமைச்சின் ஆலோசனை கூட்டம் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் அமைச்சர் மஹிந்தானந்த தலைமையில் நடைபெற்றது.

இதற்கமைவாக மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டு காப்புறுதியாக முழுமையாக பாதிக்கப்பட்ட வயல்களுக்கு ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபாயும், பகுதியளவில் பாதிப்புக்களை எதிர்கொண்டவர்களுக்கு பாதிப்பின் வகைகளுக்கு ஏற்பவும் எதிர்வரும் 28ஆம் திகதி முதல் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்று விவசாய அமைச்சர் உறுதியளித்தார் என்று இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்தார்.

மேலும், இழப்பீட்டு காப்புறுதி வரும் திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்டபத்தடி, ஆயித்தியமலை, கரடியனாறு மற்றும் ஏறாவூர் ஆகிய நான்கு இடங்களில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையில் முதல்கட்டமாக வழங்கி வைக்கப்படவுள்ளது என்றும் அவர் கூறினார். இதேவேளை கடந்த வருடங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளில் இதுவரை இழப்பீட்டு காப்புறுதி கிடைக்கப் பெறாத விவசாயிகளுக்கும் தனது வேண்டுகோளுக்கு அமைவாக மிக விரைவாக இழப்பீட்டு காப்புறுதி வழங்கப்படும் என விவசாய அமைச்சர் வாக்குறுதியளித்துள்ளதாக இக்கூட்டத்தின் நிறைவில் இராஜாங்க அமைச்சர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது கூறினார். (ஐ)



## பழைய மாணவர் ஒன்றிய அங்குரார்ப்பண கூட்டம்!

மட்டக்களப்பு, பெப். 23

கிழக்கு பல்கலைக்கழக விவசாய பீட பழைய மாணவர் ஒன்றிய அங்குரார்ப்பண பொதுக்கூட்டம் எதிர்வரும் 26ஆந் திகதி பிற்பகல் 4.00 மணியளவில் நிகழ்நிலைமூலம் இடம்பெறவுள்ளது.

அன்றையதினம், நிர்வாக சபை தெரிவு, எதிர்கால நிகழ்வுகள், அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக கலந்துரையாட திட்டமிடப்பட்டுள்ளது. இதனால், கிழக்குப் பல்கலைக்கழக விவசாய பீட பழைய மாணவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாது பங்குபெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

விவசாய பீட பழைய மாணவர்கள் அனைவரும் தங்கள் ஒத்துழைப்பை வழங்குவதோடு தங்கள் பதிவை உறுதிப்படுத்த 071 808 0118 (டாக்டர். எம். சுகிர்தரன்) எனும் கைபேசி/ வட்ஸ்அப் இலக்கத்துக்கு குறுஞ்செய்தி அனுப்பிவைக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஐ)

# அட்டாளைச்சேனையில் அடாத்தாக காணி பிடிப்பு



அக்கரைப்பற்று, பெப். 23

அட்டாளைச்சேனை, கோணவத்தை ஆற்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அரச காணியை அடாத்தாகப் பிடித்து வைத்திருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வீ. ஜெகதீசன் தெரிவித்தார்.

கோணவத்தை ஆற்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அரச காணியைச் சட்டவிரோதமாகப் பொது மக்கள் அடாத்தாகப் பிடித்துள்ளமையைத் தடை செய்வதற்கு அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் தீர்மானத்துக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தத் தீர்மானத்துக்கமைய பிராந்திய நீர்ப்பாசன பணிப்பாளர், கரையோரம் பேணல் திணைக்களத்தின் பொறியியலாளர், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர், நீர்ப்பாசனப் பணிப்பாளர், நில அளவை திணைக்களத்தின் பணிப்பாளர், அனர்த்த முகாமைத்துவ மாவட்ட உதவிப் பணிப்பாளர், பிரதேச சபை தவிசாளர் ஆகியோர் நேரடியாகக் கள விஜயம் மேற்கொண்டு குறித்த பிரதேசங்களைப் பார்வையிட்டனர்.

அண்மைக்காலமாக ஆற்றின் இரு மருங்கிலுமுள்ள அரச காணியைப் பொதுமக்கள் அடாத்தாகப் பிடித்து எல்லையிட்டு மண் நிரப்பி வருவதைக் காண முடிகின்றது. இதனால் இயற்கை அனர்த்தங்களின் போது ஏற்படக்கூடிய சேதங்கள் அதிகரிக்கக்கூடிய சூழ் நிலை ஏற்படும் என்றும் அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் கூறினார். அடாத்தாகக் காணிகளைப் பிடித்திருப்போர் உடனடியாக அவற்றை விடுவிக்க வேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# சேதனப் பசளை விவசாயத்தை ஊக்குவிப்பதே அரசின் நோக்கம்!

## கிழக்கு ஆளுநர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, பெப். 23

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்திற்கு அமைவாக கிழக்கு மாகாணத்தில் பசுமை விவசாயத்தை ஊக்குவிக்கும் முகமாக சேதனப்பசளை விவசாயத்தை ஊக்குவிப்பதே எமது நோக்கமாகும் என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2021ஆம் ஆண்டுக்கான சிறந்த விவசாயிகளை கௌரவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிரான் ரெஜி கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இதில் விருந்தினராகப் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், எதிர்காலத்தில் சேதனப் பயிர் உற்பத்தியை மேற்கொண்டு அதன் தரத்தை பரிசோதனை செய்வதற்கு இரசாயண ஆய்வு கூடங்களை கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இதன் மூலம் விவசாயிகள் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு சர்வதேச ரீதியான அங்கீகாரம் கொண்ட சான்றிதழ்களை பெற்றுக் கொள்ள முடியும். இந் நடவடிக் கைக்காக ஆயிரம் மில்லியன் ரூபாய் நிதி மூன்று மாவட்டங்களுக்கும் வழங்குவதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது. இந்த நிதி கட்டம் கட்டமாக வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவித்தார். இரசாயாண பசளை பாவனையின்றி சேதனப் பசளையை பயன்படுத்தி விவசாயம் மற்றும் சிறுதோட்டப் பயிர் செய்கை மூலம் சாதனை படைத்த விவ சாயிகள் பணப் பரிசும் நினைவு சின்னமும் அதிதிகளால் வழங்கப்பட்டன. (ஐ)





# இறக்காமம் சமுர்த்தி வங்கி முகாமையாளர் பொறுப்பேற்பு

அக்கரைப்பற்று, பெப். 23

இறக்காமம் பிரதேச செயலக சமுர்த்தி வங்கியின் முகாமையாளராக ரீ. கே. றஹ்மத்துல்லா நேற்று முன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பட்டப்படிப்பை நிறைவு செய்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை, சமுர்த்தி முகாமையாளர்களாக நியமனம் செய்யும் திட்டத்தின் கீழ் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இறக்காமம் பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் எம். சி. தஸ்லீம் தலைமையில் நடைபெற்ற கடமை பொறுப்பேற்றல் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமட் நசீல் பிரதம விருந்தினராகப் பங்கேற்றார். (ஐ)

# மட்டு. அறபா நகர கிராமத்தில் பாடசாலை அமைக்க அனுமதி!

மட்டக்களப்பு, பெப். 23

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் கோறளைப்பற்று மேற்கு கல்விக் கோட்டத்தில் அறபா நகர் கிராமத்தில் புதிய பாடசாலை அமைக்கப் படவுள்ளது.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சு இதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இது கோறளைப்பற்று மேற்கு கல்விக் கோட்டத்தில் 27ஆவது பாடசாலையாக அமையப் பெறவுள்ளது. மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகவும் பிரதியமைச்சராகவுமிருந்த மறைந்த முஹைதீன் அப்துல் காதரின் பெயரில் இந்தப் பாடசாலை அமையவுள்ளது.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச். ஈ. எம். டபிள்யூ. திஸநாயக்க பெப்ரவரி 15ஆம் திகதியிட்டு, மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ள அனுமதிக் கடிதத்தில், கிழக்கு மாகாண கல்வித் திணைக்களக் கட்டமைப்புக் குழுவின் தீர்மானத்தைக் கருத்தில் கொண்டு, புதிய பாடசாலை திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு புதிய ஆளணி வளம் அங்கீகரிக்கப்படும் வரை வலயக் கல்விப் பணிப்பாளர் உறுதிப்படுத்தியதற்கமைய அதிபர் மற்றும் ஆசிரியர்கள் வளங்களை வழங்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் புடின் நடவடிக்கைக்கு கண்டனம்

நியூயோர்க், பெப். 23

உக்ரைனின் கிழக்கில் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் பகுதிகளை சுதந்திர நாடுகளாக அங்கீகரித்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உத்தரவிட்டுள்ள நிலையில் இந்த நடவடிக்கையை அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உள்ளிட்ட பல நாடுகள் கண்டித்துள்ளன.

மேலும் ரஷ்யாவால் சுதந்திர நாடுகளாக அங்கீகரிக்கப்பட்ட டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் பகுதிகள் மீது அமெரிக்கா உடனடி பொருளாதாரத் தடையை விதித்தது.

இந்தப் பகுதிகளில் அமெரிக்கர்கள் புதிய முதலீடு, வர்த்தகம் மற்றும் நிதியுதவி செய்வதைத் தடை செய்யும் நிர்வாக உத்தரவில் ஜனாதிபதி ஜோ பைடன் கையெழுத்திட்டார்.

ரஷ்யா மேலும் உக்ரைனை ஆக்கிரமிக்க முயன்றால் கடுமையான எதிர்வினையாற்ற அமெரிக்கா மற்றும் நட்பு நாடுகள் தயாராக இருப்பதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இங்கிலாந்து, ஐரோப்பிய ஒன்றியம், ஜேர்மனி, நேட்டோ, போலந்து, பிரான்ஸ் உள்ளிட்ட பல நாடுகள் ரஷ்யா வின் இந்த நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்துள்ளன.

இதேவேளை, ரஷ்ய ஆதரவு பிரிவினை வாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள இரண்டு பகுதிகளை சுதந்திர நாடுகளாக ரஷ்யா அங்கீகரித்ததை உக்ரைன் கடுமையாகக் கண்டித்துள்ளது. இது குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுடன் தான் பேசியதாக உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் அதிரடி முடிவை அடுத்து ரஷ்யா-உக்ரைன் தொடர்பான தேசிய பாதுகாப்பு கூட்டத்திற்கு பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் அழைப்பு விடுத்துள்ளார்

உக்ரைனில் ஏற்பட்டுள்ள நெருக்கடியுடன் தொடர்புடைய முன்னேற்றங்களுக்கு தீர்வு காண அவசர தேசிய பாதுகாப்பு கூட்டத்திற்கு பிரெஞ்சு ஜனாதிபதி அழைப்பு விடுத்ததாக எலிஸி அரண்மனை தெரிவித்துள்ளது.

டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் குடியரசுகளை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அங்கீகரிப்பது சர்வதேச சட்டத்தை வெளிப்படையாக மீறும் செயல். இது உக்ரைனின் இறையாண்மையை அப்பட்டமாக மீறுகிறது என இங்கிலாந்து பிரதமர் பொரிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மக்களுக்கு ஆதரவாக நிற்க எங்களால் முடிந்த அனைத்தையும் நாங்கள் தொடர்ந்து செய்வோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

உக்ரைனில் உள்ள இரண்டு பிரிவினைவாத பிரதேசங்களை ரஷ்யா அங்கீகரிப்பது சர்வதேச சட்டம், உக்ரைனின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் மின்ஸ்க் ஒப்பந்தங்களை அப்பட்டமாக மீறுவதாகும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணையாளர் ஊர்சலா வொன் டியர் லேயன் கூறினார்.

ஐரோப்பிய ஒன்றியமும் அதன் பங்காளிகளும் உக்ரைனுடன் ஒற்றுமையுடன், உறுதியுடன் செயல்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் ஆகியவற்றை சுதந்திர நாடுகளாக அங்கீகரித்த ரஷ்யாவின் முடிவை ஜேர்மன் ஆட்சித் தலைவர் ஓலாஃப் ஷோல்ஸ் கண்டித்தார்.

அத்தகைய நடவடிக்கை மின்ஸ்க் ஒப்பந்தங்களுக்கு முற்றிலும் முரணானது. இது மின்ஸ்க் ஒப்பந்தங்களை ஒருதலைப்பட்சமாக மீறும் செயல் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# உக்ரைன் - ரஷ்யா நெருக்கடியால் எரிபொருட்களின் விலை உயர்வு!

லண்டன், பெப். 23

உக்ரைன்-ரஷ்யா நெருக்கடி உலகம் முழுவதும் விநியோகச் சங்கிலியை சீர்குலைக்கும் என்ற அச்சம் காரணமாக உலக சந்தையில் எரிபொருட்களின் விலைகள் உயர்ந்து வருகின்றன.

பதற்றங்களுக்கு மத்தியில் எரிபொருள் விநியோக சங்கிலி சீர்குலையலாம் என்ற அச்சம் ஏற் பட்டுள்ளது. இதனால் சர்வதேச சந்தையில் நேற்று செவ்வாய்க்கிழமை எண்ணெய் பீப்பாய் 98 டொலரை எட்டியது. இது இந்த வருடத்தில் இது வரை இல்லாத அதிகரிப்பாகும்.



சவூதி அரேபியாவுக்கு அடுத்தபடியாக உலகில் கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்யும் இரண்டாவது பெரிய நாடாக ரஷ்யா உள்ளது. அத்துடன், உலகின் முதன்மையான இயற்கை எரிவாயு உற்பத்தியாளராகவும் ரஷ்யா விளங்குகிறது.

இந்நிலையில் எல்லைப் பதட்டங்கள் உலகப் பொருளாதாரத்தில் கணிசமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும் என முதலீட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உலகப் பொருளாதாரம் கொரோனா வைரஸ் தொற்று நோயின் தாக்கத்திலிருந்து இன்னும் மீளாத நிலையில் உக்ரைன் - ரஷ்யா நெருக்கடி மற்றொரு பெரும் பொருளாதார சிக்கலுக்கு வழிவகுக்கலாம் எனவும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. இதேவேளை, உலகெங்கும் பங்கு வர்த்தகமும் கடும் சரிவை சந்தித்துள்ளது. (அ)



# சகல கோவிட் கட்டுப்பாடுகளையும் நாளை முதல் நீக்குகிறது இங்கிலாந்து!

லண்டன், பெப். 23

இங்கிலாந்தில் அமுலில் உள்ள அனைத்துக் கோவிட் கட்டுப்பாடுகளும் நாளை வியாழக்கிழமை முதல் விலக்கிக் கொள்ளப்படும் என பிரதமர் பொரிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வெகுஜன இலவச கோவிட் பரிசோதனை ஏப்ரல் 1 முதல் நிறுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் கோவிட் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்படுவோரை தனிமைப் படுத்துவதற்கான சட்டபூர்வ கடமைகள் பாராளுமன்ற உறுப்பினர்கள் வசம் கையளிக்கப் படும் எனவும் பொரிஸ் ஜோன்சன் கூறியுள்ளார்.

ஏப்ரல் 1 முதல் இலவச சோதனை சோதனை மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களை அடிப்படையாகக் கொண்டே முன்னெடுக்கப்படும் என அவர்மேலும் குறிப்பிட்டார்.

ஆனால் கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்டு மிகவும் ஆபத்தில் உள்ள பிரிவினரைப் பாதுகாப்பதில் இந்தத் திட்டம் தோல்வியைத் தரும் என பிரிட்டிஷ் மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், கோவிட் கட்டுப்பாடுகளை முழுமையாகத் தளர்த்தும் பிரதமரின் அறிவிப்பு அவசரமான முடிவு என எதிர்க்கட்சிகள் கூறியுள்ளன.

இதேவேளை, கோவிட் கட்டுப்பாடுகளை நீக்க பொது சுகாதாரத் துறை தமக்குப் பரிந்து செய்யவில்லை என ஸ்கொட்டிஷ் அரசாங்கம் தெரிவித்துள்ளது. கடந்த திங்கட்கிழமை மாலை பிரதமர் மாளிகையில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசிய ஜோன்சன், கோவிட் தொற்று நோயை நாம் முழுமையாக வெற்றி கொள்ள வில்லை. இந்த வைரஸ் நம்மை விட்டு முழுமையாக நீங்க வில்லை எனக் குறிப்பிட்டார்.

எனினும் தொற்று நோயாளர் தொகை மற்றும் மருத்துவமனை அனுமதிகள் குறைந்து வருகின்றன. ஒமைக்ரோன் ஆபத்தான கட்டத்தை கடந்து விட்டது என அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான நிலையில் தற்காப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தவாறே நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வர முயல்வதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை, குறிப்பிட்ட காலத்திற்கு படிப்படியாகவே கோவிட் தொற்று நோயை முழுமையாக கட்டுப்படுத்த முடியும். திடீரென்று எல்லாம் முடிந்து விடாது என இங்கிலாந்தின் தலைமை மருத்துவ அதிகாரி பேராசிரியர் சேர் கிறிஸ் விட்டி கூறியுள்ளார்.

ஒமைக்ரோன் தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இன்னும் மிக அதிகமாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

இங்கிலாந்தில் 20 பேரில் ஒருவருக்கு கோவிட் இருப்பதாக இங்கிலாந்து தேசிய புள்ளி விவரங்களுக்கான அலுவலகம் கடந்த வாரம் மதிப்பிட்டுள்ளது.

(அ)

# உக்ரைன் நெருக்கடிகளுக்கு மத்தியில் நிதானத்தை கடைப்பிடிக்கவேண்டும்

பீஜிங், பெப். 23

உக்ரைனில் நிலைமை மோசமடைந்து வருவது குறித்து சீனா கவலை வெளியிட்டுள்ளது. தற்போதைய பதற்ற நிலைக்கு மத்தியில் அனைத்து தரப்பினரும் நிதானத்தை கடைப்பிடிக்க வேண்டும். பேச்சுவார்த்தை மூலம் வேறுபாடுகளைத் தீர்க்க வேண்டும் என சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி நேற்று செவ்வாய்க் கிழமை அழைப்பு விடுத்துள்ளார். எந்தவொரு நாட்டினதும் சட்டபூர்வமான பாதுகாப்புக் கவலைகள் மதிக்கப்பட வேண்டும். என அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் அன்ரனி பிளிங்கனிடம் தொலை பேசியில் பேசிய வாங் யி தெரிவித்ததாக சீன வெளியுறவு அமைச்சு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா உக்ரைனை ஆக்கிரமிக்கும் போரை ஆரம்பிக்கக் கூடும் என்ற கவலைகளுக்கு மத்தியில் உக்ரைனின் கிழக்கில் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் பகுதிகளை சுதந்திர நாடுகளாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அங்கீகரித்துள்ளார்.

அத்துடன், சுதந்திர நாடாக அங்கீகரிக்கப் பட்ட உக்ரைன் கிழக்கு பகுதிகளான டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் பகுதிகளுக்குச் சென்று அமைதியை உறுதி செய்யுமாறும் அவர் ரஷ்யப் படைகளுக்கு உத்தரவிட்டுள் ளார்.

ஆனால் உக்ரைனை தாக்கும் எந்தத் திட்டமும் இல்லை என ரஷ்யா மறுக்கிறது. எனினும் தனது தனது அண்டை நாடான உக்ரைன் ஒருபோதும் நேட்டோவில் சேராது என்ற உறுதிமொழி உட்பட விரிவான பாதுகாப்பு உத்தரவாதங்களை வழங்க வேண்டும் என ரஷ்யா வலியுறுத்தி வருகிறது. இவ்வாறான நிலையில் உக்ரைனில் நிலைமை மோசமடைந்து வருகிறது என சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி, அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் அண்டனி பிளிங்கனிடம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில்




அனைத்து தரப்பினரும் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என சீனா மீண்டும் ஒருமுறை சீனா அழைப்பு விடுக்கிறது என அவர் தெரிவித்தார். அனைத்து தரப்பினருடனும் சீனா தொடர்ந்து தொடர்பில் இருக்கும் என்றும் வாங் கூறினார்.

இந்தப் பேச்சின்போது ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு மத்தியில் உக்ரைனின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வாங் யி இடம் பிளிங்கன் அடிக்கோடிட்டுக் காட்டினார் என்று அமெரிக்க வெளியுறவுத் துறையின் செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ் குறிப்பிட்டார். (அ)




*ரி- 20 உலகக் கிண்ணம்:*

# ஆஸியின் தலைவராக பின்ஞ் தொடர்வார்

*சிட்னி, பெப். 23*

இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரிலும் அரோன் பின்ஞ் அவுஸ்திரேலிய அணியை வழிநடத்துவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான இருபது - 20 தொடரை 4-1 என்ற கணக்கில் வென்றது அவுஸ்திரேலியா. எனினும், அணித் தலைவர் அரோன் பின்ஞ் 5 இனிங்ஸ்களில் 78 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தார்.

அவுஸ்திரேலிய அணி தோற்ற கடைசி இருபது - 20 போட்டியில் 8 ஓட்டங்களே எடுத்தார். இதனால் இருபது - 20 அணியில் பின்ஞ்சின் இடம் கேள்விக்குறியாக உள்ளது என்று பலரும் கருத்து வெளியிட்டனர்.

இந்நிலையில் அவுஸ்திரேலிய அணியின் தெரிவுக்குழுத் தலைவர் ஜோர்ஜ் பெய்லி கூறுகையில்,

“இருபது -20 உலகக் கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலிய அணிக்கு அரோன் பின்ஞ் தலைமை தாங்குவது குறித்து எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை. இலங்கைக்கு எதிராக அதிக ஓட்டங்கள் எடுத்திருக்க அவரும் விரும்பியிருப்பார். ஆனால், முழங்காலில் ஏற்பட்ட காயம் இன்னும் அவரை ஓரளவு பாதித்து வருகிறது. பாகிஸ்தானில் ஒரு நாள் தொடரில் ஆடுகளத்தில் அதிக நேரம் இருந்து ஓட்டங்களை குவிப்பார் என நம்புகிறேன். அது அவருடைய திறமையை மீட்டெடுக்க உதவும்”, என்றார். (ஐ)

# உள்ளக மெய்வல்லுநர் போட்டி இலங்கை வீரர் புதிய சாதனை!




*ரெக்சாஸ், பெப். 23*

அமெரிக்காவில் நடைபெற்று வந்த மாஸ்ரர்ஸ் உள்ளக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பில் பங்கேற்ற இலங்கையின் நீளம் பாய்தல் வீரரான தனுஷ்க சந்தருவன் உள்ளக மெய்வல்லுநர் போட்டிக்கான நீளம் பாய்தலில் சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்காவின் ரெக்சாஸ் ஏ அண்ட் எம் பல்கலைக்கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி மாஸ்ரர்ஸ் உள்ளக மெய்வல்லுநர் போட்டிகளில் தனுஷ்க சந்தருவன் பங்கேற்று வருகிறார்.

இதன் ஆண்களுக்கான நீளம் பாய்தலில் 7.82 மீற்றர் தூரம் பாய்ந்த தனுஷ்க சந்தருவன், 1995ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற உள்ளக மெய்வல்லுநர் போட்டியின் நீளம் பாய்தலில் பெனில்டஸ் பெர்னாண்டோ 7.75 மீற்றர் தூரம் பாய்ந்து படைக்கப்பட்டிருந்த இலங்கை சாதனையை 27 ஆண்டுகளுக்குப் பிறகு தனுஷ்க சந்தருவன் முறியடித்துள்ளார்.

இதேவேளை, உள்ளக மெய்வல்லுநரில் ஆண்களுக்கான நீளம் பாய்தலுக்கான உலக தரவரிசையில் 40ஆவது இடத்தை தனுஷ்க சந்தருவன் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பானுக ராஜபக்ஷவுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம்!

*கொழும்பு, பெப். 23*

இந்தியாவுக்கு எதிரான இருபது -20 தொடருக்கான அணியில் பானுக ராஜபக்ஷவை இணைத்துக் கொள்ளுமாறு கோரி இலங்கை கிரிக்கெட் சபைக்கு முன்பாக நேற்று பிற்பகல் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

உடற்தகுதியின் அடிப்படையில் பானுக ராஜபக்ஷவை அணியில் இருந்து நீக்கியது நியாயமற்றது என்று போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

பானுக ராஜபக்ஷ 2 கிலோ மீற்றர் உடற்தகுதி பயிற்சியை முடித்தார். ஆனால், தேவையான தோல் மடிப்பு நிலையை அடையத் தவறியதால் இந்தியாவுக்கு எதிரான தொடரில் இணைத்துக் கொள்ளப்பட வில்லை. இதே வேளை இந்த விவகாரம் தொடர்பில் நேற்று பாராளு மன்றத்திலும் விவாதிக்கப்பட் டது. (ஐ)


# ஐ. பி. எல். ஒளிபரப்பு ஏலம் ரூ. 135,000 கோடி தாண்டும்!

*புதுடில்லி, பெப். 23*

ஐ. பி. எல். கிரிக்கெட்டின் தொலைக்காட்சி - இணைய ஒளிபரப்பு உரிமத்துக்கான ஏலம் 50 ஆயிரம் கோடி இந்திய ரூபாயை - நம் நாட்டு மதிப்பில் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஆண்டுக்கான ஐ. பி. எல். தொடரில் 10 அணிகள் விளையாடவுள்ளன. இந்த நிலையில், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான ஒளிபரப்பு உரிமைக்கான ஏலம் நடைபெறவுள்ளது.

இந்த உரிமையைப் பெற இந்தியாவின் முன்னணி நிறுவனங்கள் கடும் போட்டியில் ஈடுபட்டுள்ளன. ஒளிபரப்பு உரிமங்களை 2008 -2017 வரை சொனி நிறுவனமும் 2018 - 2022 வரை ஸ்ரார் ஸ்போர்ட்ஸ் நிறுவனமும் பெற்றன.




ஸ்ரார் நிறுவனம் 16 ஆயிரத்து 347.5 கோடி இந்திய ரூபாயை - நம் நாட்டு மதிப்பில் 44 ஆயிரத்து 138 கோடி ரூபாய் செலுத்தி உரிமத்தைப் பெற்றது. இந்த நிலையில், இதன் உரிமைக்காலம் முடிவடைவதால் ஒளிபரப்பு உரிமையை வழங்க ஏலம் இடம்பெறவுள்ளது.

அடுத்த 5 ஆண்டுகளுக்கான ஒளிபரப்பு உரிமத்தைப் பெறுவதற்காக பல முன்னணி நிறுவனங்களும் போட்டியிடுகின்றன. இந்த ஏலம் வரும் ஏப்ரல் - மே மாதத்தில் இடம்பெறவுள்ளது.

10 அணிகள் விளையாடுவதாலும், ஐ.பி.எல். போட்டிக்கான மதிப்பு உயர்ந்து வருவதாலும் ஒளிபரப்பு உரிமத்துக்கு அதிகப்படியான எதிர்பார்ப்பும் ஏற்பட்டுள்ளது. 2023 முதல் 2027 வரையிலான 5 ஆண்டுக்கான ஐ. பி. எல். ஒளிபரப்பு உரிமம் மூலம் 50 ஆயிரம் கோடி இந்திய ரூபாய் கிடைக்கும் என்று நிபுணர்கள் கணித் துள்ளனர்.

இந்த ஏலத்தில், ஸ்ரார் மற்றும் டிஸ்னி இந்தியா நிறுவனம், சொனி பிச்சர்ஸ் நெட்வெர்க், ரிலையன்ஸ் நிறுவனத்தின் அமைப்பான வியாகாம், அமேசன் உள்ளிட்ட நிறுவனங்களிடையே கடும்போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)



# றியோ ஓப்பன் ரென்னிஸ் சம்பியனானார் அல்கராஸ்

*றியோடிஜெனிரோ, பெப். 23*

றியோ ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் ஸ்பெயின் வீரர் கார்லோஸ் அல்கராஸ் சம்பியன் பட்டத்தைத் தனதாக்கினார்.

ஆர்ஜென்ரீனாவின் றியோடிஜெனிரோ நகரில் றியோ ஓப்பன் ஏ. டி. பி. ரென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டி நேற்று முன்தினம் நடந்தது.

இதில் ஸ்பெயின் வீரர் கார்லோஸ் அல்கராஸ், ஆர்ஜென்ரீனா வீரர் டியகோ ஸ்கெவெர்ட்ஸ்மனுடன் மோதினார்.

இந்தப் போட்டியில் கார்லோஸ் அல்கராஸ் 6-4, 6-2 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றினார். (ஐ)



# மத்திய மலைநாட்டில் கடும் வறட்சி நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் குறைவு

கொழும்பு, பெப். 23

மத்திய மலை நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக பிரதான நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் குறைவடைந்து வருவதாக நீர்த்தேக்கங்களின் பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் 34.4 கன அடியாக குறைவடைந்துள்ளதாக நீர்த்தேக்க பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர். இது வான்பாயும் மட்டத்தை விட குறைவு என அவர்கள் கூறினர்.

அண்மையில் அந்த பகுதிகளில் இடைக்கிடையே மழை பெய்த போதும் அது நீர் நிறைய போதுமானதாக இல்லை என பொறியியலாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

தொடரும் இந்த நிலைமையால் காசல்ரீ நீர்த்தேக்கத்தில் இருந்து நீரை பெறும் விமலசுரேந்திர, லக்ஸபான மற்றும் பொல்பிட்டிய ஆகிய நீர்த்தேக்கங்களில் நீர் மின் உற்பத்தி குறைவடைந்துள்ளது.

இதன் தாக்கத்தால் களனி கங்கையின் நீர்மட்டமும் குறைவடையும் அபாயத்தை எதிர்க்கொண்டுள்ளதாகவும் இதனால் அந்த கங்கையின் நீரை குடிப்பதற்காக பயன்படுத்துவோரும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு நீர்த் தேக்கங்களின் நீர் மட்டம் குறைந்து வருவதால் நீர் நிலைகளின் அடிப்பகுதியில் உள்ள பல கட்டடங்கள் படிப்படியாக வெளிப்பட்டு வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்வாறு நீர் நிலைகள் வற்ற தொடங்கியுள்ளதால் வெற்று இடத்தில் சிறுவர்கள் விளையாடி வருவதாகவும் பிரதேசவாசிகள் கூறுகின்றனர். (அ)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

**விசுவநாதி செல்லத்துரை**

(செல்லத்துரை ஸ்ரோர்ஸ் உரிமையாளர் - ஈழநாடு பத்திரிகை முகவர் )

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்த்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஈழநாடு பத்திரிகை நிறுவனம்**

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 13 - 11 - 1930



மறைவு 22 - 02 - 2022

எனது பாடசாலைத் தோழர் **வி. ஐங்கரனின்** அன்புத் தந்தை

**Dr. பரமநாதன் விக்னேஷ்வரா**

அவர்கள் 22.02.2022 செவ்வாய்க்கிழமை

சிட்னியில் காலமானார்.

தனது வைத்திய பணியால் யாழ்ப்பாண மக்களுக்கு தன்னலமற்ற சேவை வழங்கியவர். தன்னைப்போலவே பிள்ளைகளையும் சமூகம் நோக்கி சிந்திக்க வைத்தவர்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன்.

**சந்திரமௌலீசன் லலீசன்**

(தலைவர் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் , பிரதி முதல்வர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

# தேவையேற்படும் பட்சத்தில் நாணயநிதியத்தைநாடுவோம்

## அமைச்சர் ரமேஷ் பத்திரண தகவல்



**கொழும்பு, பெப். 23**

**"தேவையேற்படும் பட்சத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்." - என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது.

இதன்போது சர்வதேச நாணய நிதிய விவகாரம் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிதி நிலைமை தொடர்பில் நிதி அமைச்சர் அமைச்சரவைக்கு தெளிவுப்படுத்தி வருகின்றது. இதற்கு முன்னரும் சர்வதேச நாணய நிதியத்தை நாடியுள்ளோம். எனவே, தேவையேற்பட்டால் நிச்சயம் ஒத்தழைப்பு பெறப்படும்-என்றார். (அ)

# அமைச்சர் உதய கம்மன்பிலவை இன்னும் கைது செய்யாதது ஏன்?

## தொழிற்சங்கம் கேள்வி

கொழும்பு, பெப். 23

பல்வேறு பொய்யான அறிக்கைகளை வெளியிட்டு மக்களை ஏமாற்றி வரும் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக இதுவரை நடவடிக்கை எடுக்காதது ஏன் என தொழிற்சங்கங்கள் அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பியுள்ளன.

தொழிற்சங்கவாதியான ஆனந்த பாலித, நாட்டில் போதியளவு எரிபொருள் கையிருப்பு இருப்பதாக அமைச்சர் கம்மன்பிலவின் கூற்று தவறானது என்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலக சந்தையில் எரிபொருள் விலைகள் 16 அமெரிக்க டொலர்களால் குறைந்துள்ளபோதிலும், விலைகளை அதிகரித்தால் எரிபொருள் நுகர்வு குறையும் என்பதால், எரிபொருளின் விலையை அதிகரிப்பது டொலரை மிச்சப்படுத்தும் நோக்கமாக இருப்பதாக அமைச்சர் கூறினார்.

இவ்வாறு முரண்பட்ட கருத்துகளை தெரிவித்திருந்தால் தொழிற்சங்கத்தினர் கைது செய்யப்பட்டிருப்பார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் பொது மக்கள் பாரிய சுமைக்கு ஆளாகியுள்ளனர். க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் திட்டமிடப்பட்ட மின்வெட்டு காரணமாக சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அத்தியாவசியப் பொருட்களை மறைத்து வைப்பது குற்றமாகும் என்பதால், அமைச்சர் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் ஏனைய அதிகாரிகளும் அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் விதிகளின் கீழ் கைது செய்யப்படவேண்டும்.

தொடர்ந்து 20 மாதங்களுக்கும் மேலாக உலக சந்தையில் எரிபொருள் விலை குறைப்பினால் அரசாங்கம் நன்மையடைந்து வருவதால் எரிபொருளின் விலையை அதிகரிப்பதற்கு அரசாங்கத்துக்கு எவ்வித உரிமையும் இல்லை.

உலகச் சந்தை விலைகள் ஆரம்பத்தில் ஜனவரி 2020 இல் குறைக்கப்பட்டு 2021 டிசெம்பரில் மேலும் குறைக்கப்பட்டது. அதன் பின்னர் அரசாங்கம் எரிபொருள் விலைகளை அதிகரித்தது.

மேலும், அனல் மின் நிலையங்களுக்கு எரிபொருள் கையிருப்பு கிடைக்காமையே திட்டமிடப்பட்ட மின்வெட்டுகளுக்குக் காரணம்.

எரிசக்தி நெருக்கடி இல்லை. ஆனால் மின் உற்பத்தி நிலையங்களுக்கு எரிபொருள் தட்டுப்பாடு உள்ளது.

2021 நவம்பர் 15 ஆம் திகதி பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் 90,000 மெற்றிக் தொன் நாப்தா மற்றும் உலை எண்ணெய் இருப்பதாக அமைச்சர் கம்மன்பில கூறினார்.

நாப்தா மற்றும் உலை எண்ணெயை உண்மையான பெறுமதியில் 50 வீதத்துக்கும் குறைவான விலையில் வெளி நாட்டுக்கு விற்பனை செய்தமையே இதற்குக் காரணம்.

பெற்றோலிய கூட்டுத்தாபனம் தனது பங்குகளை நிர்வகிக்கத் தவறியதன் காரணமாக பொதுமக்கள் எரிசக்தி நெருக்கடியை எதிர்கொள்கின்றனர்.

மின்சாரசபைக்கு எரிபொருளை வழங்குவது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பாகும்.

தற்போதைய நிலைமைக்கு அமைச்சர் மற்றும் அரசாங்கமே பொறுப்பு-என்றார். (அ)

# முல்லைத்தீவு நீதிமன்ற பகிரங்க ஏலவிற்பனை

முல்லைத்தீவு, பெப். 23

முல்லைத்தீவு மாவட்ட, நீதவான் நீதிமன்றம் பகிரங்க ஏல விற்பனை எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.

மோட்டார் சைக்கிள்கள், உழவு இயந்திரம், உழவு இயந்திரப் பொடிகள், டாட்டா வாகனம் மஹேந்திரா வாகனம், அபான்ஸ் முச்சக்கரவண்டி, நீதிமன்றத்தினால் அரசுடமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை அன்றைய தினம் நடைபெறவுள்ளது.

எனவே பகிரங்க ஏல விற்பனையில் பங்கு கொள்ள விரும்புவர்கள் எதிர்வரும் சனியன்று காலை 10 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்துக்கு சமூகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மோட்டார் சைக்கிள்-ஓட்டோ மோதி ஆரியகுளம் சந்திக்கு அருகே விபத்து!

## இரண்டு பேர் காயம்

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ். ஆரியகுளம் சந்தி பகுதியில் மோட்டார் சைக்கிள் - ஓட்டோ நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டது.

ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில் இந்த விபத்து இடம் பெற்றது.

மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோ என்பன நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவருக்கு கை பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டுள்ள நிலையில் ஓட்டோவை செலுத்திச் சென்ற நபருக்கு தலை பகுதியில் காயம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

## மன்னார் மனித...

மன்னார் புதைகுழி தொடர்பான வழக்கு மன்னார் நீதவான் நீதிமன்றில் 2018 ஆம் ஆண்டு முதல் இம்பெற்று வருகின்றது. அது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மன்னார் நீதிமன்றமே மேற்பார்வை செய்து வந்தது. பின்னர் அங்கிருந்து பெறப்பட்ட மாதிரிகள் அமெரிக்காவில் உள்ள பரிசோதனைக் கூடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன. அது தொடர்பான அறிக்கை ஒன்றும் தற்போது வந்துள்ளது.

இந்நிலையில் குறித்த விடயத்தில் ஈடுபட்டிருந்த அரச சட்டவாதி பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் எந்த ஒரு சட்டத்தரணியும் நீதிமன்றில் ஆஜராகக் கூடாது என்ற வாதத்தை முன்னெடுத்திருந்தார். அதனை மன்னார் நீதிவான் ஏற்றுக்கொண்டு சட்டத்தரணிகள் ஆஜராகமுடியாது என்ற உத்தரவை வழங்கினார். இதனை எதிர்த்து வவுனியா மேல்நீதிமன்றில் மீளாய்வு வழக்கொன்றை நாம் தாக்கல் செய்தோம். அந்த வழக்கின் விசாரணை இன்று முடிவுக்கு வந்தது.

அதன் பிரகாரம் எந்த ஒரு நீதிமன்றிலும் பாதிக்கப்பட்டவர் சார்பில் ஆஜராவதற்கு உரிமை இருக்கிறது. இது அரசியல் சாசன ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட ஒரு உரிமை. எனவே இது சட்டத்துக்கு மீறிய செயல் என்ற வாதத்தை நாம் முன்வைத்திருந்தோம். எனினும் குறித்த செயற்பாடுகளை அது தொந்தரவு செய்யும் என அரச சட்டவாதி வாதங்களை முன்வைத்தார். இதனை ஆராய்ந்த மேல்நீதிமன்ற நீதிபதி எந்த நடவடிக்கையிலும் பாதிக்கப்பட்ட நபர்கள் சார்பாக சட்டத்தரணிகள் ஆயராவதற்கு உரிமை இருக்கின்றது என்று உத்தரவிட்டு மன்னார் நீதவானின் உத்தரவை தள்ளுபடி செய்தார்.

இந்த தீர்ப்பு சட்டத்தின் ஆட்சிக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை பெற்றுக்கொடுப்பதில் ஒரு மைல் கல்லாக இருக்கின்றது. அத்துடன் காணாமல் போனவர்களின் அலுவலகமும் இந்த வழக்கில் இடையீடு செய்வதற்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளதுடன், புதைகுழி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் மன்னார் நீதிவானின் மேற்பார்வையிலேயே நடைபெறும் என்றும் அறிவித்துள்ளது.

அத்துடன் காணாமல்போனோர் சார்பிலும், அந்த அலுவலகம் மற்றும் பாதிக்கப்பட்டோர் சார்பிலும் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 10 நபர்கள் எந்த நேரத்திலும் அங்கு பிரசன்னமாகி அது தொடர்பான நடவடிக்கைகளை 30 மீற்றர் தொலைவில் இருந்து அவதானிப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன் முக்கியமாக ஊடகவியலாளர்கள் ஒவ்வொரு மணித்தியாலத்திலும் 10 நிமிடங்கள் அந்த இடத்திற்கு சென்று அந்த நடவடிக்கைகளை அவதானிப்பதற்கும் அது தொடர்பான செய்திகளை சேகரிப்பதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இது ஒரு முக்கியமான விடயம் ஏனெனில் இந்த புதைகுழி சம்மந்தமான விடயம் வெளிப்படையானதாக இருக்க வேண்டும்.

ஊடகவியலாளர்களும் பொதுமக்களும் அதனை பார்வையிட முடியாது என்று வலுக்கட்டயாமாக இந்த செயற்பாடுகளை முன்னெடுத்த வைத்திய அதிகாரி உத்தரவொன்றினை வழங்கி பொதுமக்களையும் ஊடகவியலாளர்களையும் அப்புறப்படுத்தினார். எனவே இத்தகைய வழக்கின் மூலம் ஊடகவியலாளர்கள் தமது செய்திகளை வெளியிடுவதற்கான சுதந்திரம் இந்த தீர்ப்பினால் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் இது தொடர்பாக எதாவது விண்ணப்பங்கள் செய்யவேண்டும் என்றால் அதனை மன்னார் நீதிவானுக்கு நேரடியாக சமர்பிக்கவேண்டும் என்றும் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் அகழ்வுப் பணி தொடர்பாக மன்னார் நீதிவானின் கட்டளையே இறுதியானதாகும். அத்துடன் நீதிவானின் நேரடிக் கண்காணிப்பில் பாதிக்கப்பட்ட மக்கள், அவர்கள் சார்பான சட்டத்தரணிகள், சட்டமா அதிபர் திணைக்களம், மருத்துவ நிபுணர்கள்,தொல்பொருள் திணைக்களம் ஆகியோர் இணைந்து கலந்துரையாடி எடுக்கும் முடிவு நீதவானால் அங்கீகரிக்கப்பட்டு அவரது நேரடி கண்காணிப்பில் அனைத்தும் இடம்பெறுவேண்டும் என்ற கருத்தும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாங்கள் ஒரு விடயத்தை மாத்திரம் முன்வைத்தே இந்த மீளாய்வு மனுவை செய்திருந்தோம். எனினும் இந்த தீர்ப்பின் மூலமாக ஜனநாயகத்துக்கும் மக்கள் ஆட்சிக்கும் சாதகமான பல விடயங்கள் வெளிப்படையாக கூறப்பட்டுள்ளன. எனவே இன்றையதினம் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் மேல்நீதிமன்றம் சிறப்பான ஒரு தீர்ப்பை அளித்திருக்கின்றது. இது மக்களின் உரிமைகளை மீண்டும் நிலைநாட்டும் என்று மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கின்றேன்.

இதேவேளை, மன்னார் நீதவானின் தீர்ப்பில் பாதிக்கப்பட்ட மக்கள் நாடகமாடுகின்றார்கள், இது ஒரு கற்பனா வாதிகளின் கற்பனை என்ற ரீதியில் அந்த உத்தரவு அமைந்திருந்தது. அதனை கண்ணுற்ற மேல் நீதிமன்ற நீதிபதி எந்த ஒரு நீதிமன்றத்தாலும் பாவிக்கக்கூடாத ஒரு வார்த்தைகள் அல்லது மொழி என்று அதனை விமர்ச்சித்திருந்தார் என்பதனையும் மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கின்றேன் - என்றார்.

வவுனியா மேல்நிதிமன்ற நீதிபதியாக கடமையாற்றும் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் குறித்த உத்தரவுகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கிளிநொச்சி...

வெளியிடுகின்றனர்.

பெற்றோலுக்கு பதிலாக சுப்பர் பெற்றோலை பெற்றுக் கொள்ள மக்கள் நீண்ட வரிசையில் நிற்பதை அவதானிக்க முடிந்தது.

இந்த விடயம் தொடர்பில் எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளரிடம் வினவியபோது,

இருப்பில் இருந்த பெற்றோல் தீர்ந்து போயுள்ளது. வரும் மக்களுக்கு பெற்றோலை வழங்க முடியவில்லை. இருப்பில் உள்ள சுப்பர் பெற்றோலையே வழங்குகின்றோம். அதுவும் குறைவாகவே உள்ளது.

இருப்பில் உள்ள மிக குறைந்த அளவிலான பெற்றோல் மற்றும் டீசலை அத்தியாவசிய தேவையின் நிமித்தம் வருவோருக்கு உறுதிப்படுத்திய பின் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் வழங்குகிறோம் - என்றார். (ஐ)

## இன்று...

கிழமை ஏ, பி மற்றும் சி ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு 4 மணித்தியாலமும் 40 நிமிடமும் மின் துண்டிப்பு அமுலாக்கப்படவுள்ளது. டி வலய பகுதிகளுக்கு 4 மணித்தியாலமும் 30 நிமிடமும் மின்துண்டிப்பு அமுலாக்கப்பட உள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மின்சாரத்தை உற்பத்தி செய்ய நாளாந்தம் சுமார் 4,000 மெற்றிக் தொன் எரிபொருள் தேவைப்படுகிறது. நேற்றைய தினம் 2 ஆயிரம் மெற்றிக் தொன்னுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதேநேரம், இன்றைய தினத்துக்கு ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருளே கையிருப்பில் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஹெரோயின்...

சிறுமியை காவலுக்கு ஆட்களை வைத்து வருபவர்களை அடையாளம் கண்டு வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ஐ)

### கச்சதீவு அந்தோனியார் திருவிழா

# இலங்கை, இந்தியாவிலிருந்து தலா 50 பக்தர்களுக்கே அனுமதி!

யாழ்ப்பாணம், பெப். 23

கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தில் பங்கேற்க இலங்கையர்கள் 50 பேருக்கும், இந்தியர்கள் 50 பேருக்குமே அனுமதி வழங்கப்படும் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்தார்.

நேற்று கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்

2022ஆம் ஆண்டுக்குரிய கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் மார்ச் மாதம் 11ஆம் 12ஆம் திகதிகளில் நடைபெற வுள்ளது இந்த உற்சவத்தில் பக்தர்கள் கலந்து கொள்வதில் ஒரு தெளிவின்மை காணப்பட்டது. ஏனென்றால் தற்போது நாட்டில் உள்ள கொரோனா தொற்று நிலை காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது

ஆரம்பத்திலேயே நாங்கள் இலங்கையிலிருந்து மாத்திரமே பக்தர்களை அனுமதிப்பதாக தீர்மானம் எடுத்திருந்தோம். இருந்தபோதிலும் தொடர்ச்சியாக தமிழக பக்தர்களும் கலந்து கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்தக் கோரிக்கையை பரிசீலனை செய்த வெளிவிவகார அமைச்சானது தனது சிபாரிசை பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பியதன் பிரகாரம் தற்போது பாதுகாப்பு அமைச்சால் இலங்கையில் இருந்து 50 பக்தர்களும் தமிழ்நாட்டில் இருந்து 50 பக்தர்கள் மாத்திரம் இம்முறை உற்சவத்தில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இதற்குரிய மேலதிக நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்கின்றோம்.

மிகவும் இறுக்கமான சுகாதார அமைச்சால் விதிக்கப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு அமைய சுகாதார நடைமுறைகளை பின்பற்றி இம்முறை உற்சவமானது சிறப்பாக இடம்பெறவுள்ளது.

எனினும் இம்முறை கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவ கட்டுப்பாடுகள் குறித்து மிக விரைவில் அறிவிக்கவுள்ளோம் அதற்குரிய முன்னேற்பாடு நட வடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

அத்தோடு பங்கு கொள்பவர்களை தீர்மானிக்கும் பொறுப்பு யாழ். ஆயர் தலைமையிலான பங்கு தந்தைகளிடம் விடப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

# அடக்குமுறை என்ற குற்றச்சாட்டு பொய்!

### ஜெனிவா கூட்டத்தொடருக்கான காய் நகர்தல் என்கின்றார் வீரசேகர

கொழும்பு, பெப். 23

ஜெனிவா கூட்டத் தொடர் நடைபெறவிருக் கும் நிலையில் எதிர்க்கட் சியினர் அரசாங்கத்துக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுகளை முன் வைப்பதாக பொதுப் பாது காப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஊடகவிய லாளர்கள் மீதான அடக்குமுறை என்ற குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதன் மூலமாக ஜெனிவா கூட்டத்தொடரை இலக்கு வைத்தே எதிர்க்கட்சி காய் நகர்த்துகின்றது என்பது புலனாவதாக அவர் கூறினார்.

கருத்து சுதந்திரம் மீதான அடக்குமுறை மற்றும் ஊடகவியலாளர்களின் மீதான அச்சுறுத்தல் குறித்து நேற்று செவ் வாய்க்கிழமை பாராளுமன்றில் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

கடந்த அரசாங்கமே யுத்த குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டு நாட்டைக் காட்டி கொடுத்தது என குற்றம் சாட்டிய சரத் வீரசேகர, இனிமேலும் இவ்வாறான கருத்துக்களை முன்வைக்கவேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார். (அ)

## மனித உரிமைகள்...

49ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகிறது. இதில், இலங்கை தொடர்பான விவகாரம் எதிர்வரும் மார்ச் 3ஆம் திகதி ஆராயப்படவுள்ளது. இந்தக் கூட்டத் தொடரில் வழக்கமாக தமிழ்த் தேசியக் கட்சிகளை சேர்ந்தவர்கள் பங்கேற்பது வழக்கம்.

இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூறுகையில்,

“மனித உரிமைகள் பேரவை தொடர்பில் செய்ய வேண்டிய விடயங்களை செய்வதுடன், பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் கூற வேண்டிய கருத்துக்களை கூறவுள்ளோம். மக்களின் உண்மையான நிலைப்பாடுகளை அறிவிக்கும் வகையில், தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்”, என்றார்.

இதனிடையே, ஐ. நா. மனித உரிமைகள் கூட்டத் தொடருக்கு மனித உரிமைகள் தொடர்பான நிலைப்பாட்டை தெளிவுபடுத்த ஆவணம் ஒன்றை அனுப்பவுள்ளதாகவும், இந்த ஆவணம் இன்னும் இரு நாட்களில் அனுப்பப்படும் என்று முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். அத்துடன், மெய்நிகர் தொழில்நுட்பம் ஊடாகவும் கூட்டத் தொடரில் பங்கேற்கப் போவதில்லை என்றும் அவர் கூறினார்.

இதேபோன்று, மனித உரிமைகள் கூட்டத் தொடரில் கலந்து கொள்ளும் எண்ணம் இல்லை என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார். பங்கேற்கவில்லை என்பது கூட்டத் தொடரை புறக்கணிப்பதாக அர்த்தம் இல்லை. சொல்ல வேண்டிய விடயங்களை சொல்ல வேண்டிய இடத்தில் உரிய முறையில் தெரிவிக்க தயாராக இருக்கிறேன். மெய்நிகர் தொழில்நுட்பத்தினூடாக பங்குபற்றக்கூடிய சந்தர்ப்பம் கிட்டினால், கூட்டத்தொடரில் பங்குபற்ற தயாராகவுள்ளேன். எனினும், விடயங்கள் தொடர்பில் கடிதங்களை அனுப்பி வருகிறோம் என்றும் சி. வி. விக்னேஸ்வரன் கூறினார்.

இதனிடையே ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளின் தூதரகங்களுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சமீபத்தில் கடிதமொன்றை அனுப்பியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரஷ்யா...

எரிபொருட்களின் விலை 115 டொலர்கள் வரை அதிகரிக்கப்படுவதால் இலங்கைக்கு பாதகமான பாதிப்பு ஏற்படும்.

அத்துடன் உக்ரைனில் ஏற்பட்டுள்ள சூழ்நிலையைத் தொடர்ந்து கட்டாரில் இருந்து அதிக ,இயற்கை எரிவாயு பங்குகளை ஐரோப்பா கொள்வனவு செய்வதால், இலங்கைக்கு போதுமான எரிவாயு கையிருப்பு கிடைக்கப் போவதில்லை. இதனை எப்படி கையாள்வது என்பது குறித்து நிதி அமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும்.

பழைய விலைக்கு எரிபொருள் வாங்கப்பட்ட மூன்று கப்பல்கள் உள்ளன. அவற்றுக்கு கட்டணம் செலுத்தி, விடுவித்துக்கொள்ள வேண்டும் - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# கன்னியா சிவனாலயத்துக்கு எதிரான வழக்கு தள்ளுபடி!

திருகோணமலை, பெப். 22

திருகோணமலை கன்னியா வெந்நீரூற்று சிவன் ஆலய வழிபாடு, ஆலய அறங்காவலர் சபைக்கு எதிராக பொலிஸார் செய்த வழக்கு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

கன்னியா வெந்நீரூற்று சிவன் ஆலயத்தில் பக்தர்கள் வழிபடுவதைத் தடுத்ததுடன், தடையை மீறி வழிபாட்டைச் செய்த நிர்வாக சபையினர்மீது கடந்த 2020ஆம் ஆண்டு டிசெம்பர் 2ஆம் திகதி உப்பு வெளி பொலிஸார், திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்த னர்.

பொலிஸாரின் தடையை மீறி வழி பாடு செய்தமை, கோவிட்- 19 காலத் தில் மக்களைக்கூட்டி வழிபாடு செய் தமை மற்றும் பக்தர்களிடம் முகப்புத் தகத்தில் விளம்பரம் செய்து பூசைக்குப் பணம் பெற்றமை எனும் குற்றச்சாட்டுகளை சுமத்தி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட காலம் முதல் ஆறு தவணைகள் கடந்து, குறித்த பொலிஸாரின் தடையும் குற்றச் சாட்டும் வலிதற்றது என நீதிமன்றம் குறிப்பிட்ட நிலையில், பொலிஸார் சட்டமா அதிபரின் ஆலோசனையை கோரினர்.

வழிபாட்டுக்குத் தடைவிதிக்க பொலிஸாருக்கு அதிகாரம் இல்லை என்பதுடன், ஆலய அறங்காவலர் சபைமீது சுமத்தப்பட்ட குற்றங்கள் வலிதற்றவை எனும் அடிப்படையில் வழக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தால் தள்ளுபடிசெய்யப்பட்டது.



## யாழ்.மீனவர் சம்மேளன பிரதிநிதிகள் மாவை சேனாதிராசாவுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் சம்மேளன பிரதிநிதிகள், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவை சந்தித்து கலந்துரையாடினர்.

நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள மாவை சேனாதிராசாவின் இல்லத்தில் இந்த கலந்துரையாடல் நடைபெற்றது.

அண்மையில் இலங்கை தமிழரசுக் கட்சியினால் தமிழக முதல்வருக்கு எழுதப்பட்டதாகக் கூறப்படும் கடிதத்தில் மீனவர் பிரச்னைகள் தொடர்பில் எதுவும் பேசாமல்விட்டமை குறித்து இந்த கலந்துரையாடலின்போது ஆராயப்பட்டதாக சந்திப்பில் கலந்து கொண்ட கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகள் ஊடகங்களுக்கு தெரிவித்தனர். (அ-03)

## வெளிநாடு செல்பவர்களுக்காக தயாரிக்கப்படும் போலி பி.சி.ஆர்.
### பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 23

இலங்கையில் இருந்து வெளிநாடு செல்வதற்காக விமான நிலைய அதிகாரிகளுக்கு சமர்பிக்கும் பி.சி.ஆர். அறிக்கை போலியாக தயாரிக் கப்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் 3 பேரை கைது செய்வதற்கு குற்ற விசா ரணை திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிரதான தரப்பு வைத்திய சாலைக்கு சமமான முறையில் இந்த போலி பி.சி.ஆர். அறிக் கைகள் தயாரிக்கப் பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த நபர்களால் நீண்ட நாட்களாக இவ்வாறு போலி பி.சி.ஆர். அறிக்கைகள் வெளி யிடப்பட்ட நிலையில் அதன் பிரதான தரப்பு வைத்திய சாலையின் கியூ.ஆர் குறியீடு நுட்பமான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அந்த போலி அறிக்கையை பெற்றுக் கொண்ட நபர்கள் பலர் அதனை பயன்படுத்தி வெளிநாடு சென்றுள்ளதாக குற்ற விசாரணை திணைக்கள தகவல் வட்டாரங் கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு கைது செய்யப் பட்ட சந்தேக நபர்கள் மினுவங் கொடை மற்றும் தர்கா நகரங் களில் வாழும் நபர்கள் என தெரியவந்துள்ளது.

ஒரு பி.சி.ஆர். அறிக்கைக் காக 6000 ரூபாய் பணம் அறிவி டுவதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (அ)



## மாணவர்களுக்கு உதவி

வடமராட்சி, பெப். 23

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் கல்விச் செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டைச் சேர்ந்த இருமாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்காக இரு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

தெல்லிப்பளை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தைச் சேர்ந்த இரு மாணவர்களுக்கு சைக்கிள் கள் கையளிக்கப்பட்டன. இந் நிகழ்வில் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமப் பொறுப்பாளர் “அமுதகலாசுரபி” செ.மோகனதாஸ் சுவாமிகள், வித்தியாலய அதிபர் செ.பரமேஸ்வரன் மற்றும் ஆச்சிரமத் தொண்டர்கள் கலந்து கொண்டனர். (அ-02)

## அறிவிப்புக்கு புறம்பாக மின் தடை; விசாரணை முன்னெடுக்க தீர்மானம்

கொழும்பு, பெப். 23

அறிவிக்கப்பட்ட நேரத்திற்கு புறம்பாக நாட்டின் சில பகுதிகளில் மின்சார துண்டிப்பை மேற்கொண்டமை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தற்போதைய நாட்களில் அறிவிக்கப்பட்ட நேரத்தில் மாத்திரமே மின்சார துண்டிப்பு மேற்கொள்ளப்படும் என அதன் தலைவர் ஜனக்க ரத்நாயக்க குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்ட நேரத்தை மீறி சில பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதாக மின்சார சபை தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன. (அ)

## மன்னார் மாவட்ட சாரணர் சங்கத்துக்கு உத்தியோகபூர்வ அலுவலகம் திறப்பு

மன்னார், பெப். 23

மன்னார் மாவட்ட சாரணர் சங்கத்திற்கு புதிய உத்தியோகபூர்வ அலுவலகம் நேற்றுக் காலை மன்னார் மாவட்ட செயலாளரும், மாவட்ட சாரணர் சங்கத்தின் தலைவருமான திருமதி.ஏ.ஸ்ரான்லி டிமெல், தலைமையில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் மன்னார் பிரதேச செயலாளர் எம். பிரதீப், மன்னார் மாவட்ட சாரணர் சங்கத்தின் தவிசாளர், மன்னார் சாரணர் சங்க மாவட்ட ஆணை யாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வை தொடர்ந்து சாரணர் இயக்கத்தின் தலைவர் பேடன் பவல் அவர்களின் 165 ஆவது பிறந்த தினத்தையொட்டி குறித்த அலுவலகத்தில் மாபெரும் இரத்ததான முகாம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)



## மட்டு. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் வருடாந்த சோதனை!

மட்டக்களப்பு, பெப். 23

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் வருடாந்த பரிசோதனை நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்க தலைமையில் இந்த வருடாந்த பரிசோதனை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குமாரசிறி மற்றும் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் பிரிவுகளின் பொறுப்பதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் அனைத்து பகுதிகளும் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதுடன் மரக்கன்றுகளும் நடப்பட்டன.

அத்துடன், மாவட்ட போக்குவரத்து பிரிவு அலுவலகத்தின் பெயர்ப்பலகையும் இதன்போது திறந்து வைக்கப்பட்டது. (ஐ)

## மன்னாரில் வன்முறை தீவிரவாதத்தை தடுப்பதற்கான விசேட செயலமர்வு

மன்னார், பெப். 23

இலங்கையில் வன்முறை தீவிரவாதத்தை தடுப்பதற்கான சமூக குழுக்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான விசேட செயலமர்வு தேசிய சமாதான பேரவையின் பிரதிநிதிகளான நஜாத் மற்றும் அமீல் ஆகியோரின் பங்கு பற்றுதலுடன் மன்னார் மாவட்ட தொடர்பாடலுக்கான மையத்தின் இணைப்பாளர் ஜோண்சன் தலைமையில் மன்னார் தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது.

தேசிய சமாதான பேரவையின் ஏற்பாட்டில் இலங்கை கெல்விட்டாஸ் அமைப்பு மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரனையில் மாவட்ட ரீதியில் உள்ள சமூக பொலிஸ் உத்தியோகத்தர்கள்,சமூக செயற்பாட்டாளர்கள், கிராம மட்ட அமைப்புக்களை உள்ளடக்கி மேற்படி செயலமர்வு இடம்பெற்றது.

பிரதேச ரீதியாக ஏற்படும் பிரிவினைகள், வன்முறை தீவிரவாதச் செயற்பாடுகளை நோக்கி நகர்வதை தடுக்கும் நோக்கிலும், பிரதேச மற்றும் மாவட்ட ரீதியில் இயங்கி வரும் சிவில் சமூகக் குழுக்களின் தீவிரவாதத்துக்கு எதிரான செயல் திறன்களை மேம்படுத்தும் விதமாக குறித்த செயலமர்வு ஒழுங்கமைக்கப்பட்டு இடம்பெற்றது.

இந்த செயல் திட்டமானது ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய இரு நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இலங்கையில் இன ரீதியான முரண்பாடுகள் அதிகம் காணப்படும் ஆறு மாவட்டங்கள் உள்வாங்கப்பட்டு அப் பகுதிகளில் இச் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)









இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - கலகலப்பு-02, 96 திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**
7.00 மணி : பாரதீ
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
9.30 மணி: பத்துக்கு 10



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் நிதி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு